112778

கும்பகோண க்ஷேத்திர
மாமாங்க
புராண வசனம்.

Q23:38.2(K31K)
N56.
112778

# கும்பகோண க்ஷேத்திர மாமாங்க புராணம்




923:3F-21193K
NSL

உ
ஸ்ரீ கும்பேசர் துணை:

# கும்பகோண க்ஷேத்திர
## மாமாங்க
# புராண வசனம்

இவை
சென்னை முத்தியாலுப்பேட்டை பாலசந்தச்சரபக்கவி
**V. A. தியாகராஜ செட்டியாரவர்களால்**
இயற்றப்பெற்று

**T. R. பாலக்ருஷ்ண முதலியார்**
அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை]   1956   [அணா 5

ஆறு: 38. ஆ1193K
உ 2 ஏ86

ஸ்ரீ கும்பேசர் துணை.

# கும்பகோண க்ஷேத்திர மாமாங்க
# புராணவசனம்

### வேழமுகன் துதி வெண்பா

அம்பிகைபாலா அரனார் திருக்குமாரா
நம்பினோர்க் கருள்கண நாதா—கும்ப
கலசத்தா லுற்பவித்த குடந்தைநகர் பெருமை
உலகத்தி லுரைக்க துணைவா.

### அமிர்த கும்பேசர் வெண்பா

அம்புவியில் தொண்டர்க் கனுகூல தேவனே
ஐம்புவே சந்திரனை ஜடையணிந்த—அம்பலவா
கும்பகோண மகதீர்த் தத்தின் புகழ்நவில
சம்போ வரமெனக்குத் தா.

### வெள்ளியங்கிரியில் விமலன் உமையின் சமேதனாக வீற்றிருக்கும் கண்காக்ஷி

அண்ட புவனங்களெண்டிசையும் கொண்டாடும் பொருட்டு ஆலகாலத்தையுண்ட சூலபாணியெனும் நீலகண்டப்பெருமானின் நிஷ்களானந்த திருவிளையாடல்கள் பலவுண்டாயினும் அப்பிரபாவங்களனைத்தும் கூற இச்சிறுநூல் கொள்ளாததலின் மிக சுருக்கமாக விளக்கிக்கூறுவோம்.

அன்றொரு காலத்தில் வெள்ளிமலையில் வேதாந்த ஸ்வரூபியாகிய சிவபெருமான் [illegible] முனிவர்களும், பக்தர்களும், முத்தர்களும், ப்ரம்மபாகவதர்களும் அருகில் புடைசூழ்ந்திருக்கவும், கன்றுமான் தோலையணிந்த கங்காள மூர்த்தியின் அருகில் கணபதி, கந்தன் இருகுழந்தைகளும் தந்தையின் காக்ஷியைக் கண்காணித்து களித்து குதித்து விளையாடி தந்தையின்

112778



பக்கலில் தங்கி நிற்கவும், தாக்ஷாயணியெனும் அம்பிகா, தன் கணவனின் பக்கலில் தாவியமர்ந்திருக்கவும் தற்பரன் வெள்ளை விடையின் அருகில் அமர்ந்து விண்ணவர்புகழ, வாசவன் அருகிருக்க வேதாந்த ரூபியாய் விளங்கினார்.

### அமுத கும்பேசர் ஆதிவிர்த்தாந்தம்

சிவபெருமான் இவ்விதம் வெள்ளிமலைச்சாரலில் அமர்ந்திருக்குங்கால் இங்கு நான்முகக் கடவுளாகிய ப்ரம்மன் ஓர்புரமாக கவலையுற்று நின்றிருக்கவும், அதைக்கண்ட அமரர்களும், பல முனிவர்களும் மனது திகைக்கவும், விமலன்கண்டு ப்ரம்மா! உன் குறை என்ன? எக்காரணம் பற்றி இவ்விதம் வருத்தமுற்று நிற்கலானாய் என கேட்க, ப்ரம்மன் கூறுவான் ஓ! சுவாமி, அடியேன் ஏது செய்வேன், இதுவரை நடத்திவந்த எனது தொழிலின் முறைக்கு பின்னம் நேரிடும்போலிருக்கின்றது என வருத்தமுடன் வழுத்த, பரமன் மனதிரங்கி, அஞ்சாதே! இதற்கொரு சூக்ஷிக்கூறுவேன் அதுபோல் நடந்துக்கொள் உனது சிருஷ்டி பீஜத்திற்குப் பின்னமேற்படாது என, நான்முகன், ஐம்முகனின் அடிபணிந்து அடியேனுக்கு அனுகிரகிக்கவேணுமென பரமன் கூறுகின்றார்.

ப்ரம்மனே; தேவலோகத்தில் காராவின் அமிர்தம் கொண்டு சரிபாகமாக ஜலம் கலந்து, அதற்குத்தகுந்த மண்ணிற் கலந்து பிசைந்து, ஓர் குடம் அமைத்து, அதற்குள் உனது சுக பீஜங்களை அமைத்து, அமுத கலையை பூணூலாக சாத்தி, அக்குடத்தின் நாற்புரமும் ஆகமவேத புராண இதிகாசங்களை சுற்றிலும் அமைத்து, காராவின் அமுதத்தை கலசத்தில் நிரப்பி மாவிலையைச்சொருகி அதின் மீது தேங்காயை அமைத்து அதற்கு குங்குமபொட்டமைத்து தர்ப்பையால் முடியிட்டு உறிபோல் சொப்பனிட்டு அக்கும்ப கலசத்திற்கு மஞ்சள்பூசி பன்னீரால் அபிஷேகம் செய்து, வில்வமலரால் அர்ச்சித்து, தூபதீப நைவேத்தியங்கொடுத்து, மேருகிரியின் மேற்பாரிசத்தில் தூக்

கிட்டுவைத்தால், பிரளயம் ஏற்படும் காலத்தில் கும்ப கலசமானது உருண்டு திரண்டு அலைமோதி அடித்துக்கொண்டு போகும், அதை பின்பற்றிச்சென்று அதைப்பிடித்து அதினுள் இருக்கும் பீஜங்களைப்பற்றி உனது சிருஷ்டித்தொழிலை நடத்தலாம் சீக்கிரம் இப்பொழுதே செல், அஞ்சாதே என்று பரமன் நான்முகனுக்கு நல்லாசிக்கூறி விடைதந்தனுப்பினார்.

### மஹா பிரளயத்தின் மகுத்துவம்

பரமமூர்த்தியின் வாக்கை நோக்கமாகக் கொண்ட ப்ரம்மன் கும்பகலசத்தையமைத்து மேருகிரியின் உச்சியில் ஸ்பனித்து, அடிவாரத்திலமர்ந்து எதிர்நோக்கிய வண்ணமாக ஏகம்பவாணனை நோக்கியோக நிஷ்டையிலமர்ந்திருந்தார். அச்சமயத்தில் பரமமூர்த்தி பகந்தவாறு பிரளயமானது ஏற்பட்டு, அலைகிளம்பி, நுறைகொண்டு, அண்டரண்டங்களும் இடிந்து விழுவது போன்று பொங்கி வழிந்து வருகுங்கால் ப்ரம்மனால் மேருகிரியிலமைக்கப்பட்ட கும்பகலசமானது பிரளயத்திலடிப்பட்டு அடித்துக்கொண்டு வந்து ஓர்சறை யணுகி அவ்விடம் மாவிலையும் தற்பையும் விழ, அது அங்கு வன்னிமரமும், அதினடியின் லிங்கமும் ஆகியது.

பின்னும் கும்பகலசமானது, புறப்பட்டு வடமேற்கு (வாயு) திக்கு நோக்கிச்சென்று, பிரளயவேகத்தால் அங்கும் நில்லாமல் செல்லவும், நான்முகன் விடாமல் அதை பின்பற்றிச் செல்லவும், இதுகளனைத்தையுமறிந்த கைலாசபதி, ஓர் பரி வேடுவனுருதாங்கி ஐங்கரன், அறுமுகன், ஆதிகேசவன், அயிராவதத்தோன் இவர்களும் வேட ரூபமே தாங்கினர் இதைக் கண்ட அமரர்களும் மற்றும் பலரும் வேடரூபமே தாங்கி, வில்லம்புகளை கைக்கொண்டு கானக்குறவேடுவர் போல் வருந்தருவாயில் கும்பகலசமானது அடித்துச்செல்வதை குருமூர்த்தியானவர் கண்டு தன்னுடன் வரும் அயிராவதத்தோனுடன் கூறுகிறார், இதோ ஜலத்தில் அலைமோதிச்செல்லும்



குடத்தை ஒரே அம்பினால் உடைத்து, அதினுள்ளிருக்கும் அமிர்த ரசத்தை அண்டசராசரங்களனைத்தும் சிதர நோக்கமுற்றிருக்கின்றேன், எனகேட்ட அமரர்கோன், ஐயனே! உனது வாக்கின் பாக்கியப்படியாக்குக என நமஸ்கரித்து இதோ இப்பாணத்தை பிரயோகியுங்கள் என்று ஓர் அம்பை எடுத்து அரனிடம் தர அப்பன் அதைக் கரத்தில் வாங்கி கலகலவென நகைத்து அப்பா! அமராதிபா! அகிலத்தையே யழிக்கவல்ல அம்சம் பொருந்திய இந்த அமிர்தகலசத்தை உனது அம்பு என்ன செய்யும், இதின் அட்டகாசத்தை அடக்குதல் அற்பமல்ல, எனகூறி ஏவ பாணத்தை பிரயோகிக்கவும் பயன்படாமற் போனதைக்கண்ட அயிராவதத்தோன் ஸ்தம்பித்து தலை குனிந்து நின்றார், பரமன் பாணப்பிரயோகம் செய்த இடமாதலால் அவ்விடத்திற்கு பாணாவர மென்றுப்பெயர் வழங்கியது.

### வேடரூபந்தாங்கிய விமலன் வெகுண்டு கும்பகலசத்தை சிதைத்தல்

கும்பகலசமானது சிதையாமற் போனதைக்கண்ட பரமன் கோபாக்கினியுடன் சீறி, தன்னிட மிருந்த பாணத்திலொன்றை எடுத்து பிரயோகிக்கவும், குடமானது பிளந்து நாற்றிசையும் வழிந்து ஓட ஆரம்பித்தது, கும்பமானது ஓடும் வேகத்தில் அதிலிருந்த **தேங்காய், வில்வம், உறி, பூணூல்** இதுகளெல்லாம் சிதைந்தோடவும், அதாவது பரமன் கும்பகலசத்தை பாணத்தினால் உடைத்த இடமிதுவாதலால் இதற்கு **குடவாயில்** என திருநாமம் அமைந்தது.

அக்கலசத்தின் மேலிருந்த நாளிகேரம் (தேங்காய்) உருண்டு திரண்டு லிங்கமாய் நின்றதால் **நாளிகேசர்** என பெயரிட்டழைக்கப்பட்டது.

வில்வமலர் நின்ற இடத்தில் **வில்வநேசர்** தோன்றினார், சிக்கம் (உறி) அடித்துக்கொண்டு போய்நின்ற இடத்தில்சிக்கமானது **சிக்கேசராக** தோன்றினார்.

யக்ஞோபதேசம் (பூணூல்) தங்கிய இடத்தில் யக்ஞோபதேசர் தோன்றினர்.

பரமமூர்த்தி பாணப்பிரயோகம் செய்து ஜெயமடைந்தவிடமாகையால் இதற்கு **பாணப்புரேசம்** என்று திருநாமம் வழங்கப்பட்டது.

கலசத்தினுள்ளிருந்த அமுதமானது இருபுரமும் வழிந்தோடியதால் ஒரு புரத்தில் பொற்றாமறையும், மறுபுரம், மகதீர்த்தமுமாகியது.

தவிற வேடருபந்தாங்கிய ஈசன் கும்பகலசத்தைகோணமாக்கியதால் இந்த க்ஷேத்திரத்திற்கு **கும்பகோணம்** என்று பெயரமையப் பெற்றது.

பரமேசுரன் கும்பகலசத்தையுடைத்து அமுதமானது வழிந்து நனைந்த மணலைவாரிப் பிசைந்து லிங்கமாக்கி வேடருபந்தாங்கிய ஐபன் பூசித்தார். பிறகு தனது வேட ருபத்தை நீக்கி லிங்கத்தினுள் ஜோதி ருபமாய் விளங்கினர். அந்த லிங்கமானது கும்பத்தினுள்ளிருந்த அமுதத்தில் உற்பவமானதால் இதற்கு **அமுத கும்பேசரென** திருநாமம் உண்டாகியது.

### கும்பேசனைத் துதிப்போ ரடையும் பலன்

பரமாதர்களின் மோகலோப இச்சையால் மயக்கங்கொண்டு தனது பத்தினியையும் பாலர்களையும் வஞ்சித்து காமக்குரோதனுக திரிந்தோனுயினும், அமிர்த கும்பேசனை அனுதினமும் துதிக்கில் சாலோகசாயுச்சிய பதவியை அடைவார்கள்.

தவிற, அமிர்த கும்பேசனை அன்போடு அணுகி அடி மலர்துதிப்பாரேல், அவர்கள் இம்மாயப்பிறவியகன்று, காயமழிந்து காலனுலகடையுங்கால், கர்மவினை சுழாமலும், காலன் பயமில்லாமலும், உயிர்நீத்து மறுப்பிறவியகற்றி சுகப்பிறவியாகுவர்.



அதுவுமன்னியில் இம்மாயாவுலகில் பிறந்துழன்று பாவ புண்ணியங்களை செய்தவர்களாயினும், தனது முடிவு நேரத்தில் சாஷாத் காலகாலனுகிய கங்காள மூர்த்தியை கருத்தில் பூஜிப்போருக்கு கர்மவினை சூழாமலும், காலயமனுகாமலும் நற்பதவியை பெற்று தற்பரனடியைப் பெறுவர்.

அல்லாமலும் ஏழைகளை வயிரெரித்தவன் யாசகர்களை வைத்து துறத்தியவன், பங்கில் பதரியெடுத்தவன்; பிறர்சொத்துக்கு ஆசைவைத்தவன், பங்காளிகளின் பங்குக்கு படுமோசம் செய்து இச்சித்தவன், மாதாபிதாவை மனதாரவைதவன், குடும்பத்திற்கே துரோகியானவன், கொடுத்துவைத்தப் பொருளை இல்லையென்றவன், வட்டிக்கு வட்டிவளரவிட்டு வழக்காடி வசூலித்தவன், தன்மானம் பிறர்மானமறியாது தருதலையாய் திரிந்தவன், குருத்துரோகம் செய்தவன், கொலை, களவு, வஞ்சகம், பொய், சூது முதலிய பஞ்சமா பாதகங்களை அஞ்சாமற் செய்து நெஞ்சம் திடங்கொண்டவன், தாகமென்று தவித்துவந்த பேர்களை தடி கொண்டடித்தோட்டியவன் கிளை வழியில் முள்ளிட்டவன், பசித்தவர்களுக்கு அன்னமிடாமல் பாவியென பெயர் படைத்தவன், பசுவை வஞ்சித்து, கன்றைக் கொன்று அதன் தோலைக்காட்டிப் பாலைக்கறந்து ஒன்றுக்கு மூன்று ஜலத்தைக்கலந்து பணத்தைத்தேடி இனத்துடன் சேராமல் குணத்தை வெறுத்து குருபியாய் திரிபவனும், நியாயஸ் தலமேறி வாயாரப் பொய் சொல்லி வாதியாய் நின்று வழக்காடியவன், வையகத்தில் வம்பு, வழக்கு, வாய்க்குரும்பு முதலிய வைகளைப் புரிந்து வயிறு வளர்த்தவன் இவர்களெல்லாம் இதின்பின் கண்டுள்ள கும்பமா நகரிலுள்ள பல தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தாலும், அல்லது அன்பர்களின் பொருட்டு, கும்பமாநகரில் குடிகொண்டிரா நின்ற எம்பிரானுகிய கும்பேசனை தினமும் வலம்வந்து பணிவார்களானல்

எத்தகைய பாவச்செயல்களாயினும் நிலவைக்கண்ட இருள் போல் விலகிநாலாம் பதவியினும் மேலான சாலோகபதவியை யடைவார்களென்பதிலையமில்லை.

[இதுவரையில் கும்பேசனின் உற்பவத்தையும், பெருமைகளையும் சொன்னோம் இனிமகதீர்த்தத்தின் மகிமையை விளக்குவோம்]

### மகதீர்த்தத்தின் மகுத்துவம்

முன்சொல்லிய அமுதக்குடமுடைந்தபோது அதினின்று வழிந்தோடிய அமுதமானது இரண்டுவிதமான தீர்த்தங்களாயின, அவற்றில் ஒன்று மகதீர்த்தமாயின அதில் மாசித்திங்களில் பௌர்ணமி யன்றுவரும் மகநக்ஷத்திரத்தில், இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர்களின் பாவக்ருதயங்கள் பலவும் பறந்தோடும்.

இந்த மகதீர்த்தக் கறையை மிக அலங்கிர்தமாக்கி இங்கு பரமமூர்த்தி ரிஷபவாகனருடராய் அன்பர்கள் கண்காணிக்க அங்கு விஜயம் செய்து கங்கை தீர்த்தத்திற்கெதிரில் அதிநூதனமான மண்டபத்தில் அமர்ந்திருக்கவும் கணேசமூர்த்தியானவர் தனது மூஷிகவாகன மீதமர்ந்து மகதீர்த்தத்தையும் கும்பேசனாகிய ருத்ரபகவானையும் வலம் வந்து தனக்கென்றமைக்கப் பெற்ற காவனத்தில் ஆவலுடன் அமரவும், தனதுதாயாகிய தாக்ஷாயணி தனது கணவராகிய தற்பரனையும், அன்னவரால் அமையப்பெற்ற அற்புதமான மகதீர்த்தத்தையும் வலம் வந்து பணிந்து தனக்கென்றிருக்கும் மண்டபத்தில் அமரவும், மற்றும் பல தேவர்களும் அரனின் ஆக்ஞைப்படி ஆங்காங்கமரவும், இவர்கள் உத்தம தீர்த்தத்தில் ஸ்நானபானம் செய்திருக்குங்கால் இதைபக்திகொண்டு பலபக்தர்களும், சித்தர்களும், துதித்து முத்தியடையும் மார்க்கத்தை தேடுவதுடன், அமரர்கள் கங்கையாடும் ஆனந்தப்பரவசத்தைக் கண்டுகளிப்பார்கள்



### நவகன்னியர்களின் வரலாறு

ஆகாயத்திலிருந்து கங்காபவானியெனும்நதியானது அதிவேகமுடன் வருகையில் சர்வேஸ்வரனின் ஜடாபாரத்தில் வீழ்ந்து நதியாக ஓடுகிறது இந்த கங்காபவானி வரும் வேகத்தை பரமேஸ்வரன் தாங்காவிட்டால் கங்கையானவள் இப்பூலோகத்திற்கு வரமுடியாது கங்கையை பரமன் பக்தர்கள் பொருட்டே தாங்கினார் மற்றநதிகளும் இதுபோல ஆகாயத்திலிருந்தே ஆதிசிவனை ஆதாரமாகக் கொண்டு அகிலத்தில் பரவியிருக்கின்றது.

நாரதர் கலகத்திற்குட்பட்ட நைமிசாரணிய ரிஷிகளின் தபசை சோதிக்க சோமேசன் யோசித்திருக்கும் கால் நவநதிகளான, கங்கை, யமுனா, கோதாவரி, சரஸ்வதி, நருமதா, காவேரி குமரி, பயோட்டினி, சரயு என்னும் ஒன்பது நதிகளும் ஒன்பது கன்னிகளாக உருகொண்டு பரமனைகண்டு தரிசித்து, சிவசிவா, சம்போ, சாம்பசிவா, சங்கரா, உலகிலுள்ள பல ஜீவராசிகளும் எங்களிடத்தில் வந்து பாவங்களைப் போக்கடித்து நற்பதவியடைகிறார்களே, அவர்களின் பாவங்களை எப்படி சுமப்போம், சுமக்க முடியவில்லையே, கபாலமூர்த்தி! எங்களைக் காப்பாற்ற வேண்டுமென கைகூப்பி துதிக்க, கங்காள மூர்த்தியானவர் கன்னியர்களே கலங்காதீர்கள் இதோ அக்கினிதிக்கில், கும்பகோணத்திற்கருகில் பாபநாசமென்னும் தீர்த்தத்தின் வடகரையில், காயா ரோகனேசனாக அமர்ந்துள்ளேன், தவிர இந்த கைலையைப்பார்க்கிலும் காசிமாநகரமே எனக்கிஷ்டமான க்ஷேத்திரம் பிரபாசதீர்த்தம், கல்பாதிதீர்த்தம், புட்கரா தீர்த்தம் கெங்காதீர்த்தம் முதலிய நதிகளின் தீர்த்தங்களாலுற்பவித்ததே பாபநாசதீர்த்தம் சிம்மராசியில் பிரகஸ்பதியான்குரு எந்த காலத்தில் பிரவேசிக்கின்றாரோ அச்சமயத்தில் தேவராதியர்கள் அனைவரும் மாசிமக நக்ஷத்திரத்தில் சந்திப்பார்கள், அதுபோலவே நீங்களும் கும்பமாநகரை யடைந்து மாசிமகத்

தன்று, மகா ஸ்நானம் செய்வீர்களானல் சகல பாவங்களும் அகன்று புனிதவதியாவீர்கள் என வாக்களித்து பரமன் மறைந்தருளினர், வரம்பெற்ற நவகன்னியர்களும் மாசிமகத் தன்று மஹாதேவன் கூறியவாறு தீர்த்தமாடினர்.

**மற்றும் பல தீர்த்தங்களின் மகிமை**

இங்கு கும்பேசுரனது மகதீர்த்தத்தின் சுற்றிலும் பல தீர்த்தங்களுள்ளது, அதின் விபரமாவன.

| | |
|---|---|
| 1. கிழக்கில்:— | இந்திரதீர்த்தம் |
| 2. தென்கிழக்கில்:— | அக்கினிதீர்த்தம் |
| 3. தெற்கில்:— | யமதீர்த்தம் |
| 4. தென்மேற்கில்:— | நிருதிதீர்த்தம் (ராக்ஷஸதீர்த்தம்) |
| 5. மேற்கில்:— | வருணதீர்த்தம் (தேவதீர்த்தம்) |
| 6. வடமேற்கில்:— | வாயுதீர்த்தம் |
| 7. வடக்கில்:— | குபேரதீர்த்தம் |
| 8. வடகிழக்கில்:— | ஈசான்யதீர்த்தம் |

திக்கெட்டிற்கும் தீர்த்தங்கள் எட்டு உள்ளதால் இதற்கு திக்குப் பாலர்களின் தீர்த்தமெனக் கூறப்படும்.

இதற்கிடையில் பிரம்மதீர்த்தமென்று ஒன்று உளது.

தவிர நவகன்னியர்களின் தீர்த்தங்களும் மேற்கண்ட வாயு தீர்த்தமும் அதாவது வடமேற்கிலிருந்து ஒன்றுவிட்டொன்று கன்னியர்களின் தீர்த்தங்களும் அமையப்பெற்று மிருக்கின்றது மேற்கூறிய தீர்த்தங்களெல்லாம் கறையோரத்தில் பொருந்தி நிற்கவும், தேவர்களின் அறுபத்தாறுகோடி தீர்த்தங்களும் மத்தியில் இருக்கின்றன.

**நவ தீர்த்தங்களின் விபரம்**

| | | |
|---|---|---|
| கங்கை | நருமதா | குமரி |
| யமுனா | சரஸ்வதி | பயோட்டினி |
| கோதாவரி | காவேரி | சரயு |



**இந்த பதினைன் தீர்த்தங்களின் பெருமை**

இந்திர தீர்த்தத்தில் ஒருமுறை ஸ்நானம் செய்தாலும், அல்லது அத்தீர்த்தத்தின் நீரை மூன்று முனை அருந்தினாலும், எத்தகைய பாபக்ருதயங்களைச் செய்த போதிலும் அவர்களின் பாவங்களகன்று முடிவில் சொர்க்க பதவியை யடைவார்கள்.

அக்கினி தீர்த்தத்திலிறங்கி அறுபத்து நான்கு முழுக்கு முழுகி கறைவந்து ஆதிபரமேசுரனை ஆனந்தமுடன் துதிப் போர்க்கு ஆதியில் அதாவது முற்பிறவியில் செய்த வினைகளும் இப்பிறவியின் இருவினைகளும், பொடிபட பறந்தோடும்.

என தய்யனுகிய கும்பேசனின் க்ஷேத்திரத்திற்கு தென் திசையிலமையப்பெற்றிருக்கும் யமதீர்த்தத்தில் பயபக்தியோடு முழுக்காடுவோரின் கர்மவினைகளும், பலவிதமான தீய விரோதங்களை புரிந்தவர்களாயினும் எமபாசம் நெருங்குங்கால் யாதொரு துன்பங்களும் அனுகாமல் எமபிராப்தியின்றி தெய் வப்பிறவியை யடைவார்.

அதாவது நிருதிமூலையிலிருக்கும் நிருதிதீர்த்தத்தில் நித்த மும் பக்தி பூண்டொழுக உத்தம ஸ்நானம் செய்த பேர்கள், அவர்கள் பூதப்பிசாசுகளின் வேதைக்குட்பட்டு பலவிதமான உபத்திரவங்களடைந்திருந்தபோதிலும், இந்த தீர்த்தம் பட்ட வுடனே பேய் பிசாசுகள் விலகி சுகஜீவியாய் வாழ்வார்கள்.

மேற்கு திசையிலுள்ள வருணதீர்த்தத்தில் மூழ்கியபேர் களுக்கு நற்புத்தி யொழுக்கத்தினை யளித்து நாளும் சுகஜீவி யாய் வாழக்கடவார்கள்.

வடமேற்கு திசையில் வாயுதீர்த்தம் இருக்கின்றது. இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர்கள் எத்தகைய துன்பங் களில் ஆழ்ந்திருந்தபோதிலும், அத்துன்பங்களெல்லாம் பஞ்சு போல் பறக்கும்.

வடக்குதிக்கில் குபேரதீர்த்தமென்று ஒரு தீர்த்தமுண்டு அந்த தீர்த்தத்தில் ஸ்நானபானம் செய்வோர்கள் எவ்வளவு பரம ஏழையாயிருப்பினும், தனது வருமை யொழிந்து நாளுக்கு நாள் சீரும் செல்வமும் பெற்று பாருக்குள் பாக்கியவானாக விளங்குவார்கள்.

ஈசான்ய திக்கில் (வடகிழக்கில்) ஈசான்ய தீர்த்தமென இருக்கின்றது அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும் மானிடர் முதல் எத்தகையஜீவஜந்துக்களாயினும், அவர்கள் செய்துள்ள கர்மவினைகளை போக்கி, உலகில் புத்திரப்பேரற்ற மலடுகளாக வருந்தும் மானிடர்களுக்கு வருத்த மகல புத்திரபாக்கியத்தை தரும் தீர்த்தமிதுவாகும்.

வாயு தீர்த்தத்திற்கும், குபேர தீர்த்தத்திற்கும் மத்தியில் பிரம்மதீர்த்தமென்று ஒருதீர்த்த முள்ளது, அந்த தீர்த்தத்தில் அனுதினமும் அதிகாலையில் எழுந்து ஸ்நானபாணம் செய்து ஆதிகும்பேசனை ஆசாரத்துடன் அடிபணிந்து போற்றுவாரேல் அவர்கள் அற்பமான ஆயுளுள்ளவர்களாயினும், அத்துய ரகன்று பூரண ஆயுள் பாக்கியத்தையடைவார்கள்.

மேலே திக்குப்பாலர்களின் தீர்தங்களின் மகிமைகளையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை கூறினோம், இனி நவ கன்னியர்களின் தீர்த்தங்களின் பலாபலன்களை கூறுவோம்.

வாயுதீர்த்தத்திற்கும், பிரம்மதீர்த்தத்திற்கும் மத்தியி லிருப்பது கங்காதீர்த்தம், இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்த வர்களின் பூர்வவினைகள் பற்றறுந்து புதுவாழ்வு பெறுவார்கள்

அதற்கடுத்திருக்கும் யமுனை தீர்த்தத்தில் தினமும் ஸ்நா னம் செய்வாரேல், காலமும் தரித்திரவானாக இருப்பினும் தனது தரித்திரதிசை யொழித்து பொன் பொருள் சேர்க்கை யுடன் நல்ல தன சம்பத்து பெற்று வாழ்வான்,



கோதாவரி எனும் தீர்த்தத்தில் ஸ்நானபாணம் செய் பவன் குருபியாயிருப்பினும், கோபமுள்ளவனாயினும், குணத்தை வெறுத்து இனத்தடன் சேராமல் தனித்து சுற்றித் திரிபவனாயினும் நல்லகுணம் பெற்று, குடும்பவாழ்க்கையிலீடு பட்டு குவலயத்தில் சுகஜீவியாய் வாழ்வான்,

நருமதை என்னும் நிருதிதீர்த்தத்தில் நம்பிக்கையுடன் நாளொன்றுக்கு மூன்றுமுறை ஸ்நானம் செய்யில் நானிலத்தில் அவன்புரிந்த பாவச்செயல்களனைத்தும் அகன்று நாலாம்பதவி யிலும் மேலான பதவியை தனது முடிவு காலத்தில் பெற்று நன்மையுடன் வாழக்கடவான்.

சரஸ்வதி என்னும் தீர்த்தத்தில் ஸ்நானபானம் செய்து கும்பேசனை ஸ்தோத்தரித்தால் சஞ்சலத்தைத்தரும் சகல வியாதிகளும் பற்றறுந்து சந்தோஷம் பெருக வாழ்வார்.

காவேரி என்னும் தீர்த்தத்தில் கர்த்தனின்மீது பக்தி யோடு மூழ்கி துதித்தபேர் குருடு, செவிடு, ஊமையாக இருந் தாலும் அப்பிறவி நீங்கி சுத்தப்பிறவி ஏற்பட்டு சுகம்பெறு வார்களென்பதில் ஐயமில்லை.

குமரி தீர்த்தத்தில் ஸ்நானம்செய்தோர்கள் சிறுவர்களாயி னும் தெய்வபக்தி பூண்டொழுகி தினமும் சர்வேஸ்வரனின் கருணையைப் பெருவதல்லாமல் மணமாகாத சிறுவர்களுக்கும் மாங்கல்யகாரியமும் புத்திரப்பேரற்றவர்களுக்கு புத்திரபாக்கி யமும், புண்ணியம் பூத்து கண்ணுதல் மூர்த்தியின் கருணை யைப் பெருவார்கள்.

பயோட்டினி என்னும் தீர்த்தத்தில் மூன்று வருடம் சென்று முழுக்காடுவோர்கள் மீளாத பெரும் கர்மவினைகள் புரிந்தவரானாலும் வினைநீங்கும், கோ பலன் பெற்று குபேரசம் பத்துடனே வாழ்வார்கள்.

சரயுநதி தீர்த்தத்தில் சித்தசுத்த வைராக்கியத்துடன் ஸ்நானம்செய்து சாம்பசிவமூர்த்தியை துதிப்போர்க்கு சஞ்சலமே யிராது, சனியினுடை கோளாருகள் இருப்பினும் நீங்கும், இந்த தீர்த்தத்தின் பெருமை மிகவும் உசிதமானது.

அறுபத்தாறு கோடி தீர்த்தம் என்னும் தேவதீர்த்தத்தில் சிவசிவாவென 108-முறை ஜெபித்துக் கொண்டு முழுக்காடுவோர்களுக்கு சகல சம்பத்தும் உண்டாகும்.

### பஞ்ச ஸ்தலங்களின் பெருமை

திருப்பாடல் வனம், திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம் திருவேரகம், திருத்தாரேசுரம்.

### திருப்பாடல் வனம்

இந்த ஸ்தலத்தில் தான் சுந்ரேசர் எழுந்தருளியுள்ளார், இன்னவரை முன்னொருகால் அகஸ்திபர் பூசித்து பொன்செய்யும் முறையையறிந்தார், இந்த ஸ்தலத்திற்கு யாத்திரை மார்க்கமாக சென்று சாஷாத் சுந்தரேஸ்வரனைத் துதித்தோர்க்கு காலபாசம் நெருங்காது, கர்மவினை சூழாது. குபேரன் பூசித்து பரமனுக்கு துணைவனாயினன், சுரதனென்பவன் பூசித்து சொர்க்கமடைந்தான், அங்கு ஓர் பிரம்ம தீர்த்தமும் உள்ளது அத்தீர்த்தத்திலாடுவோர், தீர்க்காயுளை யடைவார்கள், அந்த தீர்த்தத்தின் தக்ஷிணபுரத்தில் ஓர் புன்னைமரமுளது அம்மரத்தினடியில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியும் திருக்கோயில் கொண்டிருக்கின்றார், இந்த ஸ்தலமானது கும்பமாநகருக்கு வடகிழக்கில் உள்ளது.

### திருவிடை மருதூர்

இந்த ஸ்தலத்தில் ஆதியில் மார்கண்டேயர் இங்குள்ள மருதீசனை பூஜித்து மரலியின் பயமொழித்தார், பகவதியையடைய பரமனேதன்னை பூசித்தயிடம், இதுவுமல்லாமல், பிரம்மன், விஷ்ணு, ஐங்கரன், அறுமுகன், வரகுணன், இந்திரன்,



முதலான பலதேவர்களும் இங்குள்ள ஈசனை பூசித்து வரம் பெற்ற ஸ்தலம், தைத்திங்கள், பூசநக்ஷத்திரத்தின்போது விபண்டருக்கு காக்ஷியளிக்குமிடம், இம்மருதீசனை மனதார பூசித்தபேர்கள் மஹாவரத்தைப் பெறுவார்கள், இந்த ஸ்தலம், கும்பகோணத்திற்கு கிழக்கே இருக்கின்றது.

### திருநாகேஸ்வரம்

இதில் முன்னோர் காலத்தில் இந்த ஸ்தலத்தில் ஆதிசேஷன் ஷண்பகவனமொன்று உண்டாக்கி, அம்மலர் கொண்டு ஈசனை பூசித்த இடமாகையால் இதற்கு ஷண்பகாரண்யமென்று ஓர் காரணப்பெயருமுண்டு, இந்த ஸ்தலத்தில்சென்று சிவநாமத்தை துதித்திருப்போருக்கு சகல சம்பத்தும் பெருகும், இதில் ஆயிரம் பாணா முடியைதரித்த ஆதிசேசன் ஒரு தீர்த்தமுண்டாக்கி வெகுகாலம் அந்த தீர்த்தத்தில் மூழ்கி வந்தான், பின் சூரியன் அந்த தீர்த்தத்தில் மூழ்கிவந்ததால் இந்த தீர்த்தத்திற்கு சூரிய தீர்த்தமென்று பெயர் வாய்ந்தது பிறகு தருமதேவதைகள் மூழ்கி தற்பரனிடம் பலவரம் பெற்றதால் தருமதீர்த்த மென்றும், மற்றொரு பெயருமுண்டு. இந்த ஸ்தலம் குடந்தைமா நகருக்கு தென்கிழக்கு பாரிசத்தில் உள்ளது.

### திருவேரகம்

இந்த ஸ்தலம் மஹாபெருமைப்பெற்ற பாடற்பொருந்திய ஸ்தலமாகும், இதற்கு சுவாமிமலை என்றும் ஓர் பெயருமுண்டு, இதில் முன்னொருகால் அருணகிரிநாதர் திருபுகழ் பாடி பெருமை பெற்றது, இங்கு கூன், குருடு, செவிடு, முடம், ஊமை, வாதம், பித்தம், குஷ்டம், யானைக்கால் முதலியவைகளும் நீங்குதற்கு இந்தமலையில் பல மூலிகைகளும் உள்ளது. ஒருவன் இந்த ஸ்தலத்தை எதிர்நோக்கி ஸ்தோத்தரித்தாலும், அந்த க்ஷேத்திரத்தின் வழியாக நடந்துச் சென்றாலும் அவன் செய்துள்ள பாவங்களெல்லாம் பொடிபடவிலகும், இதில் விசித்

திர மண்டபங்களும், விமானங்களும், தெப்பகுளமும், மற்றும் பல மகுத்துவங்களும் இதில் அடங்கியுள்ளது, தவிர கார்த்திகை பூரணையிலும் தைப்பூசத்திலும் சித்திரைமாதம் சதுர்தசி திதியிலும், இம்மலையிலுள்ள திருவேகம்பநாதனை துதித்தபேர்கள் சாயுச்சிய பதவியையடைவர்.

## திருத்தாரேச்சரம்

இந்த திருத்தாரேச்சரத்திற்கு ருத்திராட்சவனமென்றும் ஒரு பெயருண்டு, அதாவது இங்கு ருத்ராக்ஷ விருக்ஷமிருப்பதால் இதற்கு இப்பெயர் அமையப்பெற்றது. இதற்கு விருக்ஷத்திலுள்ள கிளை, இலை, மலர், காய் இதுகள் தேவாம்சம் பொருந்தியது, இம்மரத்தடியில் நின்று மஹேஸ்வரனை துதிப்போர்க்கு மரலியின்பயமணுகாது, கோஹத்தி, சிசுஹத்தி முதலிய தீவினைகள் நீங்கும், இவ்விருக்ஷத்தின் கீழ் சிவசொருபன் சிவலிங்கமாய் எழுந்தருளியிருக்கின்றார்.

முன்பொருகால் தேவேந்திரனின் யானையானது தூர்வாசரின் சாபத்தினால் கரிந்த தனது தேகத்தை தேஜோன்மய மாக்கியது இதனால் இத்தலத்திற்கு ஐராவதேச்சரம் என்றும் ஒரு பெயர் உள்ளது இங்கு எமதீர்த்த ஸ்நானம் மிகவும் பெருமை பொருந்தியது.

சூரசேனன் என்னும் மன்னவன் தான்செய்த ப்ரம்மஹத்தி தோஷத்தை இந்த ஸ்தலத்தில் அன்னதானம் செய்து தனது அரும்பாதகத்தையொழித்து ஆயுள் பலத்தையடைந்தான்.

தாரன் என்பவன் சாம்பசிவனை பூஜித்து என்றைக்கும் சாகாத வரத்தை யடைந்து வாழ்கின்றான்.

மரலியானவன் மாமுனிவரால் அடைந்த சாபத்தை நிவர்த்திக்க வேண்டி அங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கி அங்குள்ள லிங்கேசனை பூஜித்து மங்களமாக தனது சாபத்தை யகற்றிக் கொண்டான் இதில் தென்திசைக்கோன் தீர்த்தமாடியதால்



இந்ததீர்த்தத்திற்கு சூலதீர்த்தம் என்றும் ஓர்பெயர் அமைந்தது

வேதியனொருவன் தனது குருபத்தினியின் சங்கம தோஷத்தைபகற்ற அன்னதானப்பலன் பெற்று இநதியில் சாயுச்சிய பதவியை யடைந்தான்.

இந்த க்ஷேத்திரம் கும்பகோணத்திற்கு தென்மேற்கு திசையில் உள்ளது. இந்த க்ஷேத்திரத்தில் அனேக புண்ணியாத் மாக்கள் அன்னதானம் புரிந்து அதிக பலனையடைந்துள்ளார்கள் இந்த க்ஷேத்திரத்தில் தான், ருத்திராக்ஷவனம், ஐராவதேச்சரம், தாரேச்சரம், முதலியன உண்டு இந்த க்ஷேத்திரத்தை யணுகி துதிப்போர்க்கு எப்பிறவியினும் எதொரு இடரும் சம்பவியாது இனிதுடன் வாழ்வார்கள்.

## கதிரவன் பூஜை

ஆதியில் தேவவிசுவகர்மாவுக்கு சஞ்சையை என்னும் ஓர் புத்திரியிருந்தாள், அன்னவளை சூரியனுக்கு தேவர்களறிய திருமணம் செய்துக் கொடுத்தார்கள். இவர்கள் சிலகாலம் சுகஜீவியாக வாழ்ந்து வரும் காலத்தில் எமதருமன் என்றொரு மகன் பிறந்தான், அவன் ஜெனித்த சிலநாள் கழித்து காளந்தி என்றொரு மகவையும் ஈன்று வாழ்ந்து வரும் நாளில் நாள் போகபோக சூரியனின் சுடரின் தீக்ஷண்யந்தாளாதவளாய், ஒருநாள் தனது மனம் துணிந்து தனது நிழலை தன்னைப்போல் ஓர் பெண்ணுருவாக அமைத்து அதனிடம் தன்மக்களிருவரையும் ஒப்படைத்து தனது பிதாவாகிய விசுவகர்மாவின் வசமடைந்தாள்.

மகள் வந்ததை யறிந்த கர்மா மனது கசிந்து அம்மா! கணவன் குழந்தைகளின்றி தனித்து முகவாட்டத்துன் எனை யடைந்த காரணமென்னவென்று வினவ, சஞ்சயை சஞ்சலத்துடன் தனது விர்த்தார் தங்களையுறைக்க, பிதாகோபங்கொண்டு, கணவனுடன் வாழ்ந்திருக்கும் மகள் வந்தால் தாய

கத்தில் தங்குதற்கிடமுண்டு. ஆனால் கணவனைவிட்டு தனித்து வந்தவளுக்கு இடமில்லை, என உரைத்து இப்பொழுதே உன் பதியின்பால் செல்லாய் என்று விடைகூறியனுப்பிவிட்டார்.

பிதாவின் கோபத்தை யறிந்தபெண் ஒன்றும் கூறாமல் மனக்கவலையுடனே மந்திரகிரியின் அடிவாரத்தில் ஓர் பெண் குதிரை யுருகொண்டு மேய்ந்திருந்தாள், பிறகு சஞ்சயை விட்டுப்போன சாயாதேவியானவள் ஆதித்தனுடன் அன்பு கொண்டு சிலநாள் வாழ்ந்திருந்து சனி என்னும் ஓர் குமாரன் தோன்ற சூரியன் தனது மனைவிக்கு மூன்று மக்கள் பிறந்ததென்று மிகவும் சந்தோஷத்துடன் வாழ்ந்து வந்தான், நாள் போகபோக சாயையானவள் தன் வயிற்றில் பிறந்த மகனை மாத்திரம் வெகு அன்புடன் சீராட்டி வளர்த்து வந்தாள் மற்ற இருபிள்ளைகளையும் கவனியாது விட்டிருக்கவும், பிள்ளைகள் மூவருக்குள் மாற்றாந்தாய் மக்கள் இருவரும் மறுதாரம்மகன் சனியும் மூவருமாக ஒருவருக்கொருவர் சச்சரவு ஏற்பட்டிருப்பதை கதிரவன் கண்டு ஆச்சரியப்பட்டு இதென்ன மாற்றாந்தாயின் மக்கள்போல் சண்டையிட்டுக் கொள்கிறார்களே என்று ஆச்சரியப்பட சாயாதேவியானவள் சிரித்து தன் கணவனுக்கு சகல சங்கதியையும் ஆதியோடந்தமாகக் கூற உடனே சூரியன் மனங்கசிந்து, தனது மனைவியிருக்கும் இடமாகிய மகேந்திரகிரியையடைய கணவன்வருவதையறிந்த, சஞ்சையைதனது குதிரைப்பிறவியை யகற்றி பழையபெண் ரூபத்தை யடைந்து தன்பத்தாவின் பாதத்தை பக்தியுடன் துதித்து நிற்கவும், மனைவியைக்கண்ட மணாளன் மனக்குறைமுழுது முணர்ந்து தனது மாமனாகிய விஸ்வகர்மாவிடம் செல்ல மருகன் வருவதை யறிந்த கர்மா தனது மருகனின் தேக ஒளியும், அந்த தீக்ஷண்யத்தினால் தனது மகளுக்கு நேர்ந்த துன்பத்தையும் நினைத்து சூரியனின் ஒளி மழுங்க சாணத்தால் மறைக்கவும், சூரியன் ஒளி குறைந்து குன்றி சிந்திக்கவும், ஆகாயவாணியானவள்



அசரீரி வாக்காக; கதிரவனே! கலங்காதே இந்த க்ஷணமே நீ கும்பகோணத்தையணுகி அங்கு லிங்க ரூபமாயிருக்கும் கும்பேசனை தியானித்து ஸந்நிதிக்கு தெற்கு புறமாக அமர்ந்து தவமிருப்பாயேல் உனது சாபம் நிவர்த்திக்கும் என உரைக்க உடனே கதிரவன் கும்பகோணத்தை யணுகி தவம்புரிய, கும்பேசனருளினால் தனது குறைநீங்கி பழைய உருகொண்டு தன் மனைவியுடன் தன்து நகருக்கனாக முன்னிருந்த சாயாதேவி மாயமாய் மறைந்திருக்கக்கண்டு மனதுதிடுக்கிட்டான். சூரியன் தவமிருந்து சாபவிமோசன மடைந்ததால் இந்த ஸ்தலத்திற்கு பாஸ்கரக்ஷேத்திரமென்றும் ஓர் பெயருள்ளது. இதுபோன்று மானிடர்கள் இம்மகேஸ்வரனை மனதாரதுதிப்பாரேல் மஹாசம்பத்தை யடைவார்கள்.

## காமதேனுவின் சாப விமோசனம்

மஹாதேவரும் மெச்சத்தகுந்தவரும், மூவுலகிலும் மஹாவல்லமைபொருந்திய தவசிரேஷ்டரும், முனிபுங்கவர்களுக்கும் மேலான முனீஸ்வரருமாகிய கௌதம மகாமுனிவர் ஓர் காலத்தில் யாத்திராவாசியாய் பலக்ஷேத்திரங்களையும் அடைந்து முடிவில் தில்லையம்பல மென்னும் சிவ சிதம்பரத்தையணுகி யோக நிஷ்டையிலமர்ந்தார், இன்னவரின் தபோநிலையானது ஈரேழு பதினான்கு லோகமும் நீராக பற்றி எரிவதுபோல் அக்கினி ஜ்வாலை வீச இதுகண்ட அமரர்கோன் இன்னவரின் தபசை யழிக்க வென்றெண்ணி, காமதேனுவை அழைத்து கௌதமரின் தபசை யழித்து வரும்படி அனுப்ப, இந்திரன் மொழிக்கிணங்கிய காமதேனு கௌதமரின் தபசடியை அணுகி அவருக்கருகிலிருக்கும் பயிர்களை யழித்து கும்மாளமிட்டு ஓடவே, கௌதமரின் யோக நிஷ்டைக்கலைந்து, கண்திறந்து பார்த்தார், காந்தாளமான கோபங்கொண்டார், உடனே தனதருகிலிருக்கும் யோக தண்டத்தை சுழற்றி அக்காமதேனுவையடிக்க, அவ்வடிபட்டதும், காமதேனுவானது மரித்து ஆகாயத்தில் நின்று

சொல்லுகின்றது, அடே! பரமசண்டாளா, நான் பூலோகத்தின் புதுமைகளைக் காணவந்தால், போக்கிரிபோல் உனது யோக தண்டத்தால் எனை அடித்தாயே, உனக்கு நற்கதி வாய்க்குமா? நீ செய்யும் தபோ பலன் பலிக்குமா, ஒரு போதும் பலியாது என்று சாபமளித்துச் சென்றது.

காமதேனு வளித்த சாபத்தைக் காதாரக்கேட்ட கௌதம முனிவர் மனம் பதரி செல்லுங்கால் வழியில் தூர்வாசரின் ஆசிரமத்தை யணுகி அம்முனிவரைப்பணிந்து, விஷயங்களை விளக்க, விபரமறிந்த முனிவர், வருந்தாதே, இப்பொழுதே, கும்பைமா நகரடைந்து கும்பேசனின் ஆலயத்திற்கு வடபுறத்தில் காசிபதீர்த்த மொன்றிருக்கின்றது அத்தீர்த்தத்தில் நீங்கள் சதிபதி இருவரும் மூழ்கி, லிங்கப்ரஷ்டை செய்து, அங்கு தங்களின் பெயரால் தீர்த்த மொன்றுண்டாக்கி, அங்கு சிலநாள் தவம் புரிவீராகில், சாம்பசிவமூர்த்தி பிரசன்னமாகி உனது குறையை தீர்த்தருளுவார் எனப்புகல, உரைகேட்ட உத்தம முனிவர் தனது பத்தினி அகல்யையுடன் சென்று தூர்வாச முனிவருரைத்தபடி கௌதம தீர்த்தமொன்றுண்டாக்கி அங்கு சதிபதி இருவரும் தவம்புரிய தர்பரன் தரிசனம் தந்து தனது சாபத்தையகற்றி கோஹத்திதோஷம் நிவர்த்தி செய்து மறைந்தார் வரம் பெற்ற கௌதமுனிவர் தனது ஆசிரமத்தை யடைந்து ஆனந்தமுடன் இருந்தார்.

இந்த கும்பைநகரில் கௌதமதீர்த்தத்தில் யாரொருவர் ஸ்நானம் செய்தாலும் பரமுத்தியை டைவார்கள்.

## வெண்ணைப் பிள்ளையார் வரலாறு

பீதாம்பரனின் மைந்தனுகிய பிரம்மதேவன் வசிக்கும் சத்திய லோகத்திற்கு சதாகாலமும் தேவர்கள் செல்லும் வழக்கம் இதுபோலவே ஓர்நாள் தேவராதியர்கள் செல்லுகையில், இந்திரபுரியில் வசிக்கும் காமதேனுவானது தானும் ப்ரம்மதேவனை



யும், கலைமகளையும் கண்டு சேவிக்க களிப்புற்று தேவர்களின் பின்தொடர்ந்துச்செல்லுங்கால், யோகநிஷ்டையிலமர்ந்திருந்த தூர்வாசர் பக்கலில் காமதேனு செல்ல, போகும் அவசரத்தில் முனிவரிருப்பதை யரியாமல் அவர் பாதத்தை தனது குளம்பினுல் மிதித்துச் சென்றது, கண்திரந்துப் பார்த்த தூர்வாசர் கடுங்கோபங் கொண்டு ஏ! காமதேனுவே, உனது கர்வத்தினுல் எனது காலை மிதித்தாயல்லவா? இனி உனது பால் பயனற்றுப்போகக்கடவது என சாபமளித்தார்.

சாபம் பெற்ற காமதேனு சஞ்சலமடைந்து இனி என்ன செய்வதுயென சத்திய லோகத்தையடைந்து சதுர்முகனைப் பணிந்து, சுவாமி எனது சஞ்சலத்தை யகற்றவேணுமென, சவிஸ்தாரத்தை யுறைக்க, அதற்கு கலைமகள் நாதன்! காமதேனுவே வருந்தாதே, இப்பொழுதே கும்பகோணத்தையணுகி காசிதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளிய கும்பேசரை துதிப்பாயேல் உனது சாபமகலுமென உரைக்க உடனே காமதேனு சதுர்முகனின் சொற்படி கும்பகோணத்தை யணுகி துதித்தும், பயனற்றுப்போனது கண்டு, காமதேனுவருந்த, அசரீரியானது அந்தர மார்க்கமாக நின்று, காமதேனுவே, உலகத்திற்கே பிரணவப்பொருளாகிய கணபதியை முதன் முதல் துதித்தல்லவோ எந்த தேவரையும் காணவேண்டும், நீ முன்பின் யோசியாமல் மகா கணபதியை மறந்து மகேஸ்வரனை பூஜித்து பயன் என்ன என உரைக்கக் கேட்ட காமதேனு, மனமகிழ்ந்து, கும்பேசரின் ஆலயத்தினருகில் தனது குளம்பினுல் பூமியைத்தோண்டி ஒரு பொய்கை உண்டாக்கி அதின் கரையில், அமர்ந்திருக்கு கணபதியை துதித்தது.

காமதேனுவானது கணேச மூர்த்தியை துதிக்கவும், பால் முகம் சுறந்து மடி கொள்ளாமல் பொங்கி வழிய அதை வெண்ணையாக்கி அப்பிள்ளையாருக்குப்பூசி அர்ச்சித்து துதித்து

தனது லோகத்திற்குப்போய் சேர்ந்தது. காமதேனுவின் வெண்ணெயினால் அபிஷேகம்பட்ட அப்பிள்ளையாருக்கு **வெண்ணெ விநாயகர்** என திருநாமமமையப்பெற்றது. குளம் பினால் சீரி உற்பவித்த இந்த பொய்கைக்கு குரதீர்த்தம் என்றும் பெயருண்டாகியது. இக்குரத்தீர்த்தத்திலாடி அங்குள்ள வெண்ணெ விநாயகனை வேண்டிதுதித்தோர்கள் வேண்டிய அனுகிரகங்களையடைந்துள்ளார்கள்.

இந்திரன் முன்பொரு காலத்தில் இந்த விநாயகனைப் பூசித்து சித்ரசேனனை புத்திரனாக அடைந்தான்.

சிவசொத்தை யபகரித்து காக்கை வலிப்பு கண்டு வருந்திய கர்மசன்மா என்பவர் இந்த குரதீர்த்தத்திலாடி தனது வினையை யொழித்தான்.

ஆதியில் கிருதவீரியனென்பவன் பூனையைக் கொன்ற பாவம் நீங்க இந்த குரதீர்த்தத்தில் மூழ்கி அச்சாபம் நீங்கு கார்த்தவீரியார்சுனனாக அவதரித்து புத்திரரருவரையடைந்தான்

சாமளாதேவி யென்பவள் வேதாளப் பீடையால் பாதித்து வெண்ணைப் பிள்ளையாரை பூசித்து அப்பீடை நீங்கி சுகம் பெற்றாள்.

இதுபோல் இன்னும் அனேக தேவராதியர்களும், முனி புங்கவர்களும் பூசித்து வேண்டிய பாக்கியங்களையும் பெற்றுள்ளனர்.

### சக்கர தீர்த்தத்தின் சரிதை

பிரம்மதேவனின் வேண்டுகோளுக்கிணங்கிய பிஞ்ஞகன் கும்பேசனாக அவதரித்த கும்பமாநகரில் முன்னொருகால் அமரர்களும், அகோரதவஞான சிரேஷ்டர்களும், அந்நகரிலுள்ள அந்தணர்களும் அனுதினமும், யாகம் வளர்த்துவதும், அமரர்கள் அமிர்த கும்பேசனை அனுஷ்டித்துப்போவதும், முனிவர்கள் தவசுபுரிவதும், நாளுக்கு நாள் இம்முறைகளெல்லாம் வையகமுழுதிலும் பாவங்கள் பற்றருந்து, புண்ணியமே



பொங்கிதோங்கியது. புண்ணியம் தழைக்கத்தழைக்க அசுரர்களுக்கு நிற்குமிடமெல்லாம் அக்கினி தீக்ஷயமாக பெருகியது. இக்குறையை தாளமுடியாமல் அவுணர்கள் தனது குலக்குருவாகிய சுக்கிராச்சாரியிடம் போய் முறையிட்டு அன்னவரின் ஏவுதலால் அரக்கர்கள் பூதப்பிசாசு ருபங்கொண்டு கும்பகோணத்தை யணுகி அமரர்களுக்கு பல இடைஞ்சல்களை விளைவித்தனர், இதனால், அந்தணர்கள் யாகத்தை யவிழ்த்தனர், முனிவர்கள் யோகத்தை மறந்தனர், அமரர்கள் அவர்களின் பக்தி ஞானத்தைத் துறந்தனர்.

இவ்விதம் திடீரென ஏற்பட்டதை யறிந்த தேவர்கள் மெய் மறந்து கும்பேசனை யணுகி, அடிபணிந்து வணங்கி முறையிட அமலன் அமரர் எதிர்தோன்றி அஞ்சாதீர் அமரர்களே, அரக்கரின் ருக்ஷியீதாகும், அதற்கு தக்கமுயற்சிகளை நாமெடுத்துக் கொள்வோம். அவரவரிடத்திற்கு அகலுங்கள் என்று அவையஸ்தமீய்ந்து அச்சுதானந்த பச்சைவண்ணனை நினைக்க ஆயன் வந்து எனழைத்திரென இயம்ப, ஈசன் விஷயங்களனைத்தை விபரமுடனுரைக்க, உடனே சியாமள ருபன் தனது சக்கரத்தினால் ராக்ஷசர்களின் சிரத்தை யருத்து பொடிபடச் செய்தது.

இச்சக்கரத்தின் மகிமையால் ஜெயம் பெற்றமையாலும் இங்குள்ள தீர்த்தத்திற்கு **சக்கர தீர்த்த** மென்று நாமப்பெயர் நல்கப்பெற்றது. இத்தீர்த்தம் பகவதீர்த்தத்திற்கும், காசிதீர்த்தத்திற்கும் மத்தியிலுள்ளது, இந்த தீர்த்தத்தில் யாரொருவர் ஸ்நானம் செய்தால், அவர்கள் பேய் பிசாசுகளால் பீடிக்கப்பட்டவர்களாயினும் அத்துயர் நீங்கி சித்தங்களித்து வாழ்குவர் இதில் அநந்தங்கோடி தேவர்களும் ஸ்நானம் செய்து வெகு பலனை யடைந்துள்ளார்கள்.

### காசிப தீர்த்தத்தின் மகுத்தவம்

ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் உந்தி கமலத்தினிடமாகநான் முகக்கடவுள் தோன்றினர், நான் முகனுக்குச்சுதனாக காசிபர்

தோன்றினர் அவர் சகல கலைகளுமுணர்ந்து பருவவயதில் அதிதி திதி என இருமாதரை மணந்து வாழ்ந்துவரும் நாளில், அதிதி என்பவளுக்கு முப்பத்து முக்கோடி தேவர்களுதித்தனர். பிறகு திதி என்பவளுக்கு அறுபத்தாறுகோடி தானவர்களும் தோன்றினர்.

இதைக்கண்ட அதிதி மிகவும் சோகமுற்று தனது கணவனை யணுகி, ப்ராணபதி! திதியிடத்தில் தாங்கள் மிகவும் அன்பு கொண்டிருந்து அறுபத்தாறுகோடி தானவரையீன்றீர் யான் அதிர்பாதி மகவை யீன்றது தர்மமா யான் இன்னும் சில புத்திரரைப்பெற அனுகிரகிக்க வேண்டுமென வுரைக்கவும், காசிபர் அதற்கிசையாமல் அதுமுடியாது என கண்டிதமாய்க் கூறவும், அதிதி பலவந்தம் செய்ய முனிவர் கோபங்கொண்டு உதைத்துத்தள்ள, அதிதி அடங்கொணாத கோபங்கொண்டு ஒருதலைப்பக்ஷமாக காதல் கொண்டதால் உனது காதலழிந்து நீ அலியாகப் போகக்கடவாய் என்று சபித்தாள் உத்தமியின் வாக்கானதால் உடனே காசிபநுக்கு ஆண்தத்துவம் மாறலாயிற்று இதையறிந்த முனிவர் மனங்கலங்கி மாயவனிடம் போய் முறையிட உடனே மணிவண்ணன் அப்பா நீ செய்தது பிழை மனைவியாயிருப்பினும் அவள் மனதும் கோணச் செய்தாய், தேவரைச் சுருக்கினாய் அவுணரைப் பெருக்கினாய் இதைக்கேட்டதற்கு அதிதியையும் அடித்தாய் அவள் கோபத்தால், ஜபித்தாள், அவள் செய்ததுபற்றி அவளையாதும் செய்வதற்கில்லை ஆனால் இதற்கொரு பரிகாரமுண்டு அதாவது குடந்தை நகருக்குச்சென்று கும்பேசரின் சன்னதிக்கருகில் இருக்கும் தீர்த்தத்திலாடி அந்த சர்வேஸ்வரனை வேண்டி தவம் புரிந்தால் உனது அலித்தன்மை நீங்கும், எனக்கூற உடனே முனிவர் அவ்வண்ணமே கும்பமாநகரை யணுகி தீர்த்தமாடி கும்பேசரரை தியானித்து அலித்தன்மை நீக்கினார் இவர் ஸ்நானம் செய்து அதிதியின் மனக்கவலையை அகற்றிய தீர்த்தமாதலால் இத்தீர்த்தத்திற்கு காசிப தீர்த்தமென்று பெயரமைந்



தது, சதிபதியின் சச்சரவிலீடுபட்டவர்களும் இத்தீர்த்தத்தில் மூழ்கி கும்பேசரனை தியானிப்பாரேல் சகல சம்பத்துடன் வாழ்வார்கள்.

## பாவன தீர்த்தம்

மறைக்காடென்னும் வேதாரண்யத்தில் வேதமோதும் வேதியர்குலத் திலகனாகிய பாவனனென்னும் ஓர் அந்தணர் இருந்தார். அவருக்கு பரமானந்தன் என்றொரு சீடனுமிருந்தான் சீடனானவன் குருவின் வாக்கைத் திருவாக்காகக் கொண்டு பணிவிடை புரிந்து அவரது வேதநூல்களை உபதேசம் பெற்று வந்தான், நாளடைவில் பாவனனென்னும் பிராமணரின் தாயானவள் தீடீரென காலகதியடைய, பிராமணர், தாய் செய்த நன்றிக்கு தன்னை மறந்து வருந்தி கருமகிரியை முடித்து அன்னவளின் அஸ்தியை புண்ணிய நதிதேடிவிட எண்ணி ஓர் மட்பாண்டத்திலிட்டு வாய்க்கட்டி தனது சீடனைத் துணையாக கொண்டு அஸ்திகுடத்தை சீடனிடம் கொடுத்து தானும் சீடனும் கங்கையை நோக்கி நடந்தார்கள் போகும் வழியில் கும்பகோண ஸ்தலம் நெருங்கியதால் அங்குள்ள க்ஷேத்திரத்திற்குச் சென்று தெய்வ வழிபாடு செய்துப்போவோமென நினைத்து, நாகேசரின் நதித்துறையில் ஓர் மரத்தின் கிளையில் அக்குடத்தை தூக்கிட்டு கட்டி சீடனை அதற்குக் காவலாக வைத்துச் சென்றார்.

அந்தணர் சென்றதும் பரமானந்தன் வெகுநேரம் வரையில் காத்திருந்தான், குருநாதன் வரவில்லை, பரமானந்தனுக்கு பசிதாளமுடியவில்லை யோசித்தான், நமது குருநாதன் கொண்டு வந்த குடத்தில் ஏதாவது தின்பண்டமிருக்குமா பார்ப்போமென மரக்கிளையிலிருந்த குடத்தை யவிழ்த்து மேல் மூடியை யகற்றி பார்த்தான், உள்ளே மல்லிகை புஷ்பங்களாக இருந்தன கண்டு இது நம்பசிக்கு உதவாது எனச்சிந்தித்து எப்பொழுதும்போல் மரத்தில் கட்டிவிட்டு கறையில் அமர்ந்திருந்தான்.

112778

வேதியர் தனது பூஜை முதலியவைகளை முடித்துக் கொண்டு வந்து குடத்தை எடுத்துக் கொண்டு சீடனுடன் நடந்தார், அனேகதூரம் சென்று காசிநதியை அடைந்து அந்த நதிக் கரையில் அமர்ந்து சீடனிடம் அக்குடத்தைத்தந்து மேற்றுணியை யகற்றும்படியாக சொல்ல சீடன் மேற்சீலையை யகற்றி பார்க்க உள்ளிருந்த வஸ்துக்கள் அஸ்தியாக இருக்கக்கண்டு ஸ்தம்பித்து நின்றான், வேதியர் சீடனை நோக்கி அப்பா! ஏன் இப்படி வியப்புற்று நின்றாய் என, சீடன் கண்டதைக் கதையாய்க் கூற கேட்ட பாவனன், ஏனடா நீ உண்மையை என்னிடம் கூறவில்லை, என, ஸ்வாமி! தாங்கள் அடியேன்மீது கோபிப்பீரென சும்மா இருந்துவிட்டேன். என, உண்மையை யுணர்ந்த வேதியர் அக்குடத்தை பழையபடி வாய்மூடி காவிரிக் கரையிலமர்ந்து மேல்மூடியை யகற்றிப்பார்க்க அஸ்திகளெல்லாம், அருமையான மல்லிகை மலர்களாக இருக்கக்கண்டு, ஆண்டவனின் திருவுளச்செயலை அதிசயித்து காவேரித்துறையில் அதை விடுத்தார். குடத்திலிருந்த அஸ்தியாகிய மலரை விடுத்து மறையவர் அக்குளத்தில் ஸ்நானபானம் செய்து யோக நிஷ்டையிலமர்ந்தார்.

வேதியரின் நிஷ்டைக்கிறங்கிய நிரந்தான், எதிர்தோன்றி பக்தா யாதுவரம் வேண்டும் கேள் தருகிறேன் எனப்புகல பிராமணர், சுவாமி அடியேன்! எமபயமின்றி ஏந்தலாகிய நினது பாதாரவிந்தம் யான் சேரவேண்டும், தவிர, இத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வோர் அவர்கள் செய்த பாவங்கள் எவ்வளவிருப்பினும் எல்லாம் பொடிபட்டு உனது அருள் பெறவேண்டும் இத்தீர்த்தத்திற்கு எனது திருநாமம் விளங்கச் செய்ய வேண்டுமென கேட்க, அப்படியே அளித்தோமென கூறி ஐயன் மறைந்தார். அன்று முதல் இந்த தீர்த்தத்திற்கு பாவன தீர்த்தமென்று பெயர் வழங்கி வந்தது.



## மருத்துவதி மஹேஸ்வரனை பூஜித்தபடலம்

கிராதகுலத்தில் சுபாகு என்னும் ஓர் வேடுவன் தனது மனைவி மருத்துவதி என்பவளுடன் வாழ்ந்து வரும் நாளில், ஒருநாள் அப்பெண் தனது கணவனை நோக்கி, நாதா! தாங்கள் காலமும் வேண்டிய ஜீவஜந்துக்களை வதைக்கின்றீர் பொய், களவு, கொலை முதலியனவும்புரிந்து காலத்தைக் கழித்தாலும் காலையில் எழுந்தவுடன் சர்வேஸ்வரன்மீது அதிக பக்தி பூண்டொழுகியவராக நடந்துக்கொள்கின்றீர். இதுவிஷயத்தில் எனக்கே ஆச்சர்யத்தைத் தருகின்றது என, வேடுவன் கலகலவென நகைத்து பெண்ணே! நான் காலமும் செய்வது பாவச் செயலல்ல, ஜீவனை வதைத்து ஜீவனை காப்பாற்றுகிறேன் எனது குலத்தொழிலை செய்வதில் இதுபாதகமாகாது. ஆனால் நான் முன்பிறவியில் ஓர் நாயாக பிறந்திருந்தேன். பல பக்தர்களும் கும்பகோணத்தையடைந்து மகாமக தரிசனத்தைக் காணச்சென்றார்கள், நானும் அவர்களுடன் பின்பற்றிச்சென்று அங்குள்ள காசிபதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அன்னிய பதார்த்தமின்றி அமுதுபொசித்து, கும்பேசராலயத்திற்கு சென்றேன். அங்கு உட்செல்ல என்னாலியலவில்லையாதலால் வாயற்படிக்கு அப்புறமே இருந்து ஈசனை தியானித்தேன், என்னை கண்ட சில பக்தர்கள், நாய் கோயில் வாசற்படியில் நிற்கின்றதென என் கருத்தையுணராமல் என்னை நையப்புடைத்து மடித்து வீழ்த்தினர்.

மடிந்த உடன் எனதாவியானது சிவலோகம் செல்ல, அங்கிருந்த சிவகணங்களுடன் யானும் கலந்துக்கொண்டேன், பிறகு பரமன் எனது பக்திக்குமெச்சி என்னை இந்த கிராதகுலத்தில் பிறக்கச்செய்தார், ஆதலால் பெண்ணே! யான் அந்த கும்பேசரை பணிந்ததால் சகல பாதகங்களும் எனைவிட்டகன்று சிவலோகத்தையும் சிவதரிசனத்தையும் கண்டேன், ஆதலால் நீயும் இன்றுமுதற்கொண்டு சிவனை மறவாமல் சிவபூஜை செய்

வாயாக என்றுவேடுவன்கூற, மடுத்துவதி மனமகிழ்ந்து கும்பேசனை பூசிக்கலானாள். ஆதலால், ஆதிகும்பேசனை யாரொருவர் தியானிக்கின்றார்களோ அவர்களின் அரும்பாவமகன்று சாயுச்ய பதவியை யடைவார்கள்.

### சோம நாதர் சரித்திரம்

ஆதியில் மாளவதேச மென்னும் நாட்டில் ஆங்கீரஸ முனிவரென்றொரு அந்தணரிருந்தார், அன்னவருக்கு சத்தியன் பிரகஸ்பதி, சம்பவர்தன் என்று மூன்று புதல்வர்கள் ஜெனித்தனர், அதில் பிரகஸ்பதி என்பவன். தேவர்களுக்கு குருவாக வேண்டும், என மனவுறுதிக்கொண்டு கும்பகோணத்தை யணுகி, சோமசுந்தரி சமேதராய் வீற்றிருக்கும் சோமநாதரை தினமும் பணிந்து வந்தான் பிறகு சிலகாலம்சென்று கந்தமூலங்களைப்புசித்து, கடுமையான தபசு புரிந்தான், பிரகஸ்பதியின் தபசுக்கிரங்கிய சோமராயர் எதிர்தோன்றி, அப்பா. உனதருந் தபசுக்கு ஆனந்தப் பரவசமடைந்தோமாயினும்! உனக்கென்னவரம் வேண்டும் கேள்எனவும், சுவாமி! இவ்வேழை தேவகுருவாக இருக்க ஆவலுற்றவனாக இருக்கின்றேன். எனது எண்ணம் ஈடேரவேண்டும், எனவும், அதற்குப் பரமமூர்த்தி! பக்தா! என்செய்வது முடவன் எட்டாதேனுக்கு இச்சிப்பதுபோல் இயலாத வார்த்தைக் கேட்கின்றாய், தேவர்களுக்கு குருவாக வேண்டுமானால் அது சாமான்யமானதா? ஆனால் ஒன்று நீ பிரகதீசவ யாகமொன்று வளர்த்தி தபசுபுரிவாயேல் உனது எண்ணம் ஒருவாறு முடிந்தாலும் முடியலாம். எனக்கூற, பிரகஸ்பதி! பித்தகனைப்பணிந்து சுவாமி! தாங்கள் கூறிய யாகத்திற்கு அளவிலாத திரவியம் வேண்டுமே, ஏழையாகிய பிராமணன் ஏது செய்யமுடியும் என உடனே ஈசன், குபேரனை யழைத்து பொன் உதவும்படிகூற பிரகஸ்பதி குபேரனின் சகாயத்தைக் கொண்டு கோரிய யாகத்தை சோமதீர்த்த கரையில் நடப்பித்தார். இவரது யாகத்திற்கு சோமேசர் மகிழ்ந்து, சோமசுந்தரி சமேதராகத்தோன்றி, பிரகஸ்பதிக்கு வேண்டிய வரத்தை யளித்து, அமரர்களை அழைப்பித்து, அமரர்களே! இன்று முதற்கொண்டு இன்னவரை தேவகுருவாக அமைத்துள்ளோம், அதின்படி நடந்துக் கொள்வீரென அனுக்கிரகம் செய்தருளினர், வரம்பெற்ற பிரகஸ்பதி அன்றுமுதல் தேவகுருவாக விளங்கினர் இந்த சோமேசுரர் ஆலயத்தை சுற்றி வலம்வந்து பக்தியுடன் பூசிப்போருக்கு சித்திபெரும் காரியங்கள் வேணதுண்டு.



### தாக்ஷாயணியின் வரலாறு

ஆதியில் நான் முகனின் சுட்டு விரலிலுற்பவித்த தக்ஷண் என்னும் மன்னனுக்கு பதினாறு பெண்கள் பிறந்தனர், அதில் பதிமூன்று பெண்களை நமனுக்கும், ஒருத்தியை பிதுர் தேவதைக்கும், மற்றொருத்தியை அக்கினி பகவானுக்கும் வாழ்க்கைத் துணைவியாக்கி, பிறகு எல்லோருக்கும் இளயவளான தாக்ஷாயணி என்பவளை சர்வலோக சாரண்யரான சங்கரமூர்த்திக்கு தந்தனூர், சதிபதிகள் ஏகோபித்து சுக க்ஷேமத்துடன் வாழ்ந்துவரும் நாளில், தக்கன் ஒருநாள் தனது மருகர்தனை கண்டுவர சென்றான், நேரே வைவசுத பட்டணத்தை யணுகி தனது பதிமூன்று குமாரத்திகளையும், மருகனாகிய சண்டனையும் கண்டு மிகவும் மனக்களிப்புடன் பிதுர்தேவனிடம் அனுகி அவனால் வேண்டிய மரியாதைகளைப் பெற்று, அக்கிபகவனிடம் சென்று அங்கும் அவனால் வேண்டிய உபசாரம் பெற்று, நேரே வெள்ளியங்கிரியை யடைந்தான்.

வெள்ளியங்கிரியில் விமலன் தாக்ஷாயணி சமேதராக பூதப்படைகளுடன் பக்தர்கள் முக்தர்கள் புடைசூழ பகவான் அமர்ந்திருந்தார். அச்சமயத்தில் தக்ஷண் அங்குவந்து மருகனைக் காண, தக்ஷண் வந்ததைக் சிறிதும் கவனியாது தர்பரன் அமர்ந்திருக்க அடங்காத கோபங்கொண்ட அரசன் இவன் ஒரு வைத்தியக்காரன், பூதங்களிடத்திலும், பிசாசுகளிடத்திலும்.

ஆண்டிபரதேசிகளிடத்திலும் அனுசரணையுள்ளவன், இவனுடைய யோக்கியதையை யறியாமல் பெண்ணைத் தந்தோம் ஆயினும் இனி இவன் முகத்திலும் விழிக்கப்படாது, என்று சினமுற்று தனது நாட்டை யடைந்து, தனது மருகர்களை அழைப்பித்து, வெள்ளியங்கிரியில் நடந்த விர்த்தாந்தங்களைக்கூறி, இப்பெரிய பாதகனையும், என் மகளாகிய தாக்ஷாயணியையும் இன்றோடு மறந்துவிட்டேன் நீங்களும் இனி அவன் முகத்தில் விழிக்கப்படாது என அவர்களை திட்டப்படுத்தி வைத்திருந்தான்.

சிலநாள் சென்று தக்ஷன் ஓர் யாகம் செய்ய உத்தேசங்கொண்டு யாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும், காலம், இடம் இதுகளையும், மால் அயன் முதலிய மற்றுமுள்ள தேவர்களுக்கெல்லாம் திருமுகம் அனுப்பி பரமன் தவிர வரவழைத்தான், தக்ஷனின் வேண்டுகோட் கிணங்கி அமரர்களனைவரும் தக்ஷன் யாகத்தை யடைந்தனர், இச்செய்தியை தர்பரனின் பக்கலில் அமர்ந்திருந்த தாக்ஷாயணி யறிந்து கணவனைப் பணிந்து நாதா! என் தந்தை செய்யும் யாகத்தை பார்த்து வருவோம் வாருங்கள் என்று சதியழைக்க பதியான பரமன், பெண்ணே! நம்மைமதியாமல் சகலதேவர்களையும்வரவழைத்து உன் தந்தை யாகம் செய்கின்றார், அழையாத வீட்டிற்கு நாம் போகப்படாது, வேண்டுமானால் நீசென்று யாகத்தைப் பார்த்து வருவாய் என்று விடைதர, உடனே தாக்ஷாயணி ஜெயவிஜயாள் என்னும் இருகந்தர் வஸ்திரீகளைத் துணைக்கொண்டு தந்தையின் யாகசாலையை யடைந்தாள், மகள் வரவைக்கண்ட தக்ஷன் தன்மகளை வாவென்றழையாமலும், வாய்பேசாமலும் பராமுக மாயிருந்து விட்டான், இதைக்கண்ட தாக்ஷாயணி கடுங்கோபங்கொண்டு, பத்தாவின் வாக்கை மீரி வந்ததால் இக்கதி நேர்ந்தது இனி இச்சடலத்தை எடுத்துக் கொண்டு பத்தாவிடம் போகப்படாது என மனது துணிந்து தீவளர்த்தி அதில் குதித்து தனதுயிரை மாய்த்தாள்



தீபாய்ந்த தாக்ஷாயணி இமையமலைச் சாரலில் ஓர் தாமரைத் தடாகத்தில் தாமரை இலைமீது ஓர் குழந்தையுருகொண்டிருக்கக்கண்ட அம்மலைக்கரசனாகிய பருவதராஜன் அக்குழந்தையை எடுத்து பருவதத்திற் கருகில் குளத்தில் ஜெனித்ததால் பார்வதாதேவியென திருநாமம் புனையப்பெற்று வெகு சிறப்புடன் வளர்த்து வந்தான், இது நிற்க தாக்ஷாயணி தீக்கிரையானதை நாரதரானவர் பரமசிவனிடம் வந்து தெரிவிக்க பரமசிவனானவர் காந்தாளம் பொங்கி தனது ஜடையினின்று ஒரு ரோமத்தை யுருவி புவியின்மீது ஓங்கி அடிக்க உடனே அதிலிருந்து அகோர வீரபத்திரர் உற்பவித்து பரமனைப் பணிந்து எனையுற்பவித்தது எதுக்கென, பரமன் தக்ஷனை அதம் செய்து வாருமென உத்திரவளிக்க, உடனே அகோர வீரபத்திரர் பூதப்படைகளுடன் ஓங்காரமாக கொக்கரித்து ஓடிவந்து தக்ஷனின் யாகத்தை யழித்து, அங்கிருக்கும் தேவர்களை யெல்லாம் அடித்து துரத்தி, தக்கனை தலையையறுத்து, வெள்ளியங்கிரியை யடைந்து பரமனுக்கு தான் செய்து வந்ததை யுரைக்கவும் பரமன் மனமகிழ்ந்து கல்லால விருக்ஷத்தின் கீழ் கண்மூடியோக நிஷ்டையிலமர்ந்தார், இங்கு பரமன் யோகத்திலமர்ந்தார், இமையகிரியில் பர்வத ராஜனிடம் வளர்ந்து பருவ பக்குவ மடைந்து பரமனையே மணக்க வேண்டி அம்மனும் யோகத்திலமர்ந்தாள்.

இவர்கள் இப்படி இருக்க, உலகமே உற்பத்தி நின்றுவிட்டது, எங்கும் பரமனின் தபசு அனல்கொண்டு வீச ஆரம்பித்தது, தேவர்கள் அனைவரும் மெய்வருந்தி இந்திரனையடைய இந்திரன் மன்மதனை யழைத்து மஹாதேவன்மீது மலர்கணை ஏவி அவரது யோகத்தை கலைக்கும்படி ஆக்யாபிக்க, அதற்கு மதன் சம்மதித்து புரப்பட, ரதிதேவி மறுத்து எவ்வளவோ கூறியும் கேளாது பரமனை யணுகி பஞ்சபாணத்தை ஏவினன் பரமன் கண்திறந்து பார்க்க சாம்பலாக எரிந்தான், இது சேதி

யரிந்த ரதிதேவி பரமனை யணுகி புலம்பி தனது கணவனை எழுப்பித்தரும்படி வேண்ட, பரமன் அம்மா அஞ்சாதே! இன்னும் சிலநாளில் பருவதராஜன் மகளை யான் மணம் சூட்டுவேன், அது சமயம் எனது யோகமும் முடியும் அப்பொழுது உன் மணாளனை எழுப்பித் தருகிறேன் என்று விடைதந்து மறுபடியும் யோக நிஷ்டையிலமர்ந்து சிலநாள் சென்று பரமன் பருவதராஜன் மகளை மணக்கவேண்டி ஓர் விருதாப்பிய வேதியன் போல் உருகொண்டு பார்வதா தேவியை மணந்தார், பிறகு பரமனும் பார்வதியும் கைலையங்கிரியை யடைந்திருக்கும்நாளில் ஒருநாள் பார்வதி பரமனைப்பணிந்து நாதா! நான் தங்களை எப்பொழுதும் பிரியாமலே இருக்கவேண்டும் என்று வணங்க, பரமன் கிருபைபாலித்து வரகபாசத்தை யளித்ததால் உமாமகேஸ்வரரென உலகில் திருநாமம் விளங்கலாயிற்று,

சிலகாலம் சென்று தாருகாசூரன், சூரபத்மன், முதலிய அசுரர்களின் ஆர்பாட்டம் அதிகரித்து அமரர்களை பல ஆபத்துக்குள்ளாக்கவும், பரமனின் கிருபையால் சுப்ரீமண்யக்கடவுள் அவதரித்து சூரர்களை வதைத்து தேவர்களின் சிறைமீட்டனர். பிறகு அமரர்கள் கைலையை அணுகி, அம்பலவாணனை பணிந்து ஐயனே! தேவரீர் கிருபையால் அசுரர்களால் விளைந்த கேடுகள் ஒழிந்தன, ஆதலால் தாங்களின் திருத்தாண்டவ நடனத்தை யாங்கள் கண்டு ஆனந்திக்க வேண்டுமென, பரமன் கூறுகிறார். அமரர்களே! அஞ்சாதீர், நீங்கள் கும்பமாநகரை யடையுங்கள் அங்கு வந்து எனது நடனத்தை நடத்துகின்றேன் எனக்கூறி, கும்பமாநகரில் தனது ஆனந்தத்தாண்டவத்தை அமரர்களுக்காக ஆடினார், ஆதலால் இந்த ஆனந்த தாண்டவத்தை யாரொருவர் மார்கழித்திருவாதிரையில் கும்பகோணத்தில்வந்து தெரிசிக்கின்றார்களோ அவர்களே தன்பராவார்கள்.



## அபிமுகேசன் பிரபாவம்

நவகன்னியர்கள், முன்பொருகால் மகநீராட வந்தபோது மேற்கு முகமாயிருந்து காக்ஷிதந்ததால் இவருக்கு அபிமுகேசர் என திருநாமம் வழங்கப்பட்டது. அமுதவல்லித் தாயார் இன்னவருக்கு இல்லாளானாள். இவரது ஸ்தலத்தைநாடி பூஜித்தோர்களின் பூர்வவினை நீங்கும், குஷ்டநோயாயினும் அகலும், ஊமையாயின் பேசுவான், மற்றும் பலவித பாவக்ருதயங்கள் பற்றரும். இதுபோலவே முன்பொருகால் காஷ்மீர் தேசத்தில் சுதன்மன் எனும் அரசன் தன்மகன் ஊமையாயிருந்ததால் மகதீர்த்தமாடி அபிமுகேசரைப் பணிந்து தனது மகன் பிணிநீங்கி சுகபோகமாகச்சென்றான்.

## ஆரா அமுதரின் அதிசயம்

ஆதியில் மகமேரு சிகரத்தில் ஏமரிஷி ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைக் குறித்து அகோரமான தபசு புரிந்தார். அச்சமயத்தில் மகாவிஷ்ணுவானவர் கருடவாகனரூடராய் ப்ராப்தமாகி கோரும் வரம் என்னவென கேட்க முனிவர் எழுந்து பரந்தாமனை வணங்கி பகவானே! நான் முத்தியடைய சித்தம் பாலித்தருளவேண்டும் என, மாயன் பக்தா! இது அற்பமல்ல முத்திக்கு முதற்காரணம், நீ சிலதுகாலம் கும்பகோணம் சென்று கும்பேசனின் சன்னதிக் கருகில் வடபாரிசத்தில் அமர்ந்து தவம் புரிந்தால் யான் உனக்கு அங்கு தரிசனந்தந்து நீகோரிய வரத்தைகொடுப்பேனென உரைத்து மறைந்தார்.

மணி வண்ணனின் கட்டளைப்படி மாமுனிவர் கும்பகோணத்தை யணுகி தாமரை தடாகத்தில் நீராடி ஆதி கும்பேசுரனைக் குறித்து, அவர் ஆலயத்தின் வடபாகத்தில் தபசு புரியலானார். ஸ்ரீஷாப்தி சயனத்தில் சயனித்திருக்கும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியை, மஹாலக்ஷிமியானவள் வணங்கி நாதா! ஏமரிஷிக்கு அளித்த வாக்கு மறந்து விட்டீரோ? பக்தன் எவ்வளவு

காலமாய் தபசுபுரிகின்றான் என உரைக்க, ஏ மாதே! நீ இப்பொழுதே கும்பகோணத்தை யணுகி கோமளவல்லி எனும் பெயருடன் அங்கு தவமிருப்பாயேல்! யான் அவ்விடம் வந்து காக்ஷியளிப்பேனென விடைபெற்ற லக்ஷிமிதேவியும் அவ்விதமே தபசு புரியலானாள், பிறகு தேவாசுரயுத்தம் நடந்தது அச்சமயம் விஷ்ணுவானவர் கருடவாகன ரூடராய் ஏமரிஷிக்கு எதிர்தோன்றி சாக்ஷியளித்து மோக்ஷ மீய்ந்து மகாலக்ஷிமியை மார்பிலணைத்து கருடவாகன ரூடராய் சென்றனர். ஏமரிஷி தபசுபுரிந்த இடத்திலிருந்த பொய்கைக்கு ஏமதீர்த்தம் என்று பெயர் வழங்கியது. பிறகு சூரர்களை விஷ்ணு சக்கரத்தினால் சம்மரித்ததால் இதற்கு சக்கரதீர்த்த மென்றும் ஒரு பெயர் உலவிவருகிறது. இதில் மாசி மாதத்தில் வதிரண்ய சிராத்தம், பிதுர் தேவதா திலோதகம், தீர்த்த சிரார்த்தம் செய்பவர் எத்தகைய பாவங்களை செய்திருப்பினும் சொர்க்க லோகத்தை யடைவார்கள், சூரர்களை சம்மரிக்கும் பொருட்டு பாதாளீசரானவர் அங்குற்றிருக்க, சோமேசரின் வடபுரத்தில் பரந்தாமன் ஸ்பனமாக இருக்கவும், விமானத்தில் சேஷசயனத்தில் சூரிய சந்திராளோடும், சீதேவி, பூதேவியோடும், இருக்கின்றார் தக்ஷிணயனத்தில் தெற்குவாயலும், உத்ராயணத்தில் வடக்குவாயலும், சாரங்கபாணி சுவாமியின் கோயிற்கதவு திறக்கும் சப்தம் யாரொருவர் கேட்கிறார்களோ, அவர்களுக்கு சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ய பதவிகிட்டும்.

### தானங்களின் நியமம்

ஆதிகும்பேசனை அணுகி ஸ்நானபானம் செய்வோர், தாம்பாளத்தட்டில் கோதுமையை பரவச்செய்து, அதின்மீது கனிவர்கங்களை கலந்து தாம்பூல தக்ஷணையுடன் வைத்து வெண்மையான வஸ்திரத்தால் மூடி, சிவபக்தியிற் சிறந்த பிராமணரை யழைப்பித்து, அவரை ஆசாரத்துடன் சேவித்துக்கொண்டு மேற்கண்ட தானத்தை யளிக்கவேண்டும்.



ஓர் சைவ பிராமணருக்கு சந்தனம், புஷ்பம் தரித்து, பொன், வஸ்திரம், பூணூல், குதிரை, பசு, கன்னிகை, ரிஷபம், விபூதி, சந்தனம், தானியம், பால், பாயாசம், அன்னம், கறிவகைகள், தாம்பூலம், தக்ஷணை, கற்கண்டு, ஹோமசமித்தை முதலியன வழங்கவேண்டும்.

இதுபோல் அனேக விதமான தானங்களைச் செய்தால் கும்பேசருடைய அனுகிரகத்தால் குவலயத்தில் குபேர சம்பத்துடன் வாழ்வதுடன், குடும்பம் மேன்மையாகவும் தழைக்கும்.

### பிப்பிலாதனுக்கு கைலாசநாதர் காக்ஷிதந்த படலம்

பிப்பிலாதன் என்னும் யோகத்திற் சிறந்த உத்தமர் ஒருவர் கேதாரம் என்னும் நாட்டில் வெகுகாலமாக வாழ்ந்து வந்தார். இவ்வயோதிகர் சாக்ஷாத் கங்காள மூர்த்தியின் சாக்ஷியைக் காண கடூரமான தவமியற்ற, இம்மகானின் மன உருதியையுணர்ந்த மஹாதேவன் மான் மழுதரித்து, தவம் புரிந்த மஹான் முன்னதாகத்தோன்றி, அப்பா! இக்கொடிய தவம்புரிந்த உனது கருத்து என்னை? என கர்த்தனானவர் கேட்க பிப்பிலாதனெனும் பெரியவர் கூறுகிறார் அரவாபரண மணிந்த அண்ணலே, தாங்கள் அன்ன பூரணியின் சமேதராக அமர்ந்திருக்கும் காக்ஷியை இவ்வடியேன் கண்டு ஆனந்திக்க அனேக நாட்களாக ஆவலுற்றிருக்கின்றேன், அடிவர்க்கிரங்கும் அம்பலவாணா அடிமையின் கவலையை அகற்றவேண்டும் என அடிபணிந்த, பக்தனை ஆசீர்வதித்து பரமன் சொல்வார்: அன்பனே! அஞ்சாதே இப்பொழுதே நீ கும்பகோணத்தை யடைந்து அங்குள்ள கும்பலிங்கக் குறியைக்கண்டு அதை பூசித்தால் அங்கு நீ கோரியபடி காக்ஷித்தருகிறோம் எனக்கேட்ட பிப்பிலாதன் மனது சஞ்சலத்துடன், இறைவனே! இவ்வளவு காலம் வரையில் தங்களைக்காண எவ்வளவோ பிரயாசைப்பட்டும் முடிவில் தாங்கள் தோன்றி மூப்பு மேலிட்டு பலஹீனத்தினால் பதித்திருக்கும் எனை கும்பகோணம் போகும்படி தெரிவிக்கின்றீரே, கும்ப

கோண மென்பது அருகிலா இருக்கின்றது, என்று மனம் வருந்தக்கண்ட அமலன் அவ்வந்தணர்மீது அன்புகூர்ந்து, சரி அப்படி ஆகாதென்றால் அதோ இருக்கும் பொய்கையி லிறங்கி ஸ்நானம் செய்து வாவென ஆக்யாபிக்க, அப்படியே நல்ல தென்று ஆனந்தத்துடன் பொய்கையை அணுகி ஜலத்தினுள் மூழ்கி மேலே எழுந்து பார்க்க எதிரில் நின்ற இறைவன் காணப்படவில்லை, இதைக்கண்ட பிப்பிலாத மனஞ்சலித்து அங்கு கரைமீது நிற்கும் பேர்களைக்கண்டு எல்லாம் மாறுதலா இருக்க அதிசயித்து என்ன க்ஷேத்திரம் இதுவெனக்கேட்க, கும்பகோணம் எனத்தெரிந்து கரையில் வந்து கும்பலிங்கேஸ்வரை, பூசிக்க நினைந்து கனிந்து திருநீரணிந்து, திவ்ய சொரூபனாகிய தீனரக்ஷகனைப்பணிந்து பதவிப்பெற நினைந்து பூசிக்கவும், கர்த்தன் மனங்கனிந்து கரத்தில் சூலத்துடன் கன்று மான் தோலை யணிந்து எதிர்தோன்றி அங்கு வடபாரிசத்திலுள்ள ஷண்பகவனத்தில் பத்தனை தன்னருளால் சேர்ப்பித்து அவ்வனத்தில், தான் வசிக்கும் கைலையங்கிரியைப்போல் தோற்றுவித்து, அங்கு ஓர் மண்டபத்தில் ஓர் சிம்மாசனமியற்றி அதில் உமையவள் சமேதராக அமர்ந்து, தேவகணங்களும், பூதங்களும் சூழ, வெண்குடை நிழில் வீற்றிருக்கக்கண்ட பிப்பிலாதன், ஆனந்தப்பரவசமடைந்து, அரோகரா எனதுதித்து, ஆனந்த கீதங்களைப்பாடி அகமகிழ்ந்தார், உடனே இறைவன் இக்கோலம் நீங்கி, அங்கு லிங்க ரூபந்தாங்கி, கைலாயம் போன்ற வனத்தில் நின்றதால் கைலாய நாதரெனும் பெயர் பூண்டு காக்ஷியளித்ததால் இன்றுவரையில் அந்த லிங்கத்திற்கு கைலாய நாதரெனும் பெயர் வழங்கி வருகிறது. இந்த கைலாய மூர்த்தியை கைதொழுது சேவிப்போர் கனங்கொண்ட கீர்த்தியுடன் வாழ்ந்து கடைசியில் கடவுளின் நிழலை யடைவார்கள்.



## வைகுந்த வாசகன் வராக ரூபந்தாங்கிய படலம்

ஸ்ரீவைகுந்த வாசனாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தி இலக்குமி தேவி சமேதராக அந்தப் புரத்தில் அமர்ந்திருந்தார். ஆனால் வைகுந்த வாயற்படிக்கு துவாரபாலர்களாகிய ஜெய விஜயாள் இருவர்களை காவலாக அமைத்தது மன்னியில் யார்வரினும், முன்னதாக ஒருவர் வந்து அறிவிக்கும் படியும் ஆக்யாபித்திருந்தனர். இவர்கள் காவல் தவராமல் இருக்கும் நாளில் ஒருநாள் நான்முகன் மைந்தர்களானசில தவசிரேஷ்டர்கள், மகாலக்ஷ்மியின் நாயகனைக்கண்டு வணங்குதற்கு ஆவலுள்ளவர்களாய் வந்து அங்குதுவார பாலர்களிருக்கக்கண்டு முனிவர்கள், துவார பாலர்களை வழிவிடுங்கள். நாராயண மூர்த்தியை தரிசிக்கவேண்டும் என, துவாரபாலர்கள் இது சமயமல்ல என்று தற்கித்திருக்கும்போது, இதை யரிந்த மகாவிஷ்ணுவானவர் நேரில் வந்து முனிவர்களுக்கு சமாதானம் கூறி உள்ளழைத்துக்கொண்டு ஜெயவிஜயாளைப்பார்த்து, யார்வரினும் உங்களில் ஒருவர் வந்து நமக்கு அறிவிக்கும்படி தெரிவித்திருக்க அதை சற்றும் கவனியாமல், அதற்குமாறாக நடந்துக் கொண்டமையால், நீங்கள் அடங்காத அசுரராக பிறக்கக் கடவீர் என சாபமிட்டு, இப்பொழுது அரைக்ஷணமேனும் இங்கு நில்லாதீர் என்று நாராயண மூர்த்தி கடுங்கோபத்துடன் கூற, துவார பாலர்கள் இருவரும் ஸ்ரீமந் நாராயணனைப் பணிந்து! ஐயனே! பல யுகங்களாக தங்களின் அடிமைகளாக இருந்த எங்களுக்கு முடிவில் இந்தகொடிய சாபத்தைத்தருதல் நீதியா? எப்பிழை யாங்கள் செய்யினும் அப்பிழையை மன்னித்து யாங்கள் ஈடேறும் மார்க்கத்தைத் தேடவேண்டும் என்று வணங்க, நாராயணன் மனதிறங்கி, அப்படியானால் நீங்கள் இருவரும் நான் சொன்னபடியே இரண்யன், இரண்யாக்கதனென மகாவீரர்களாகவும், எனக்கு நேர்விரோதியாகவும் பிறந்து எனக்கே பல கேடுகளை விளைவிப்பீர்கள் அச்சமயத்தில் யானே உங்களைக் கொன்று எனது சொர்க்கத்திற் கழைத்துக் கொள்கிறேன் என

உரைக்க, விஷ்ணுவின் கட்டளைப்படியே பிறக்க வுறுதிக் கொண்டு சென்றனர்.

நாராயண மூர்த்தியின் சாபத்தினால் பிறக்கப்பட்ட துவாரபாலகர் இருவரும் இரண்ய இரண்யாக்ஷனாக உருகொண்டு, ஈரேழு பதினான்கு லோகங்களும் நடுக்கும்படியாக அரசுபுரிந்து, நான்முகனால் அரியபெரிய வரங்களையெல்லாம் பெற்று அமரர்களை இம்சித்து அட்டகாசம் செய்தனர், இதைக்கண்ட தேவர்கள் அனைவரும் மனது நொந்து மலர்மகள் கொழுனனிடம் தன் மனக்குறைகளை கூறலாயினர், தேவா! தங்களிடம் காவல் புரிந்து சாபமடையப்பட்ட ஜெய விஜயாள் இருவரும் இரண்யன், இரண்யாக்ஷனாகப்பிறந்து. இரன்யன் எங்களைப் படுத்தும் கொடுமை கொஞ்சமல்ல, இதுபோதாமல் அவன் தம்பியாகிய, இரண்யாக்ஷகன் பூமியையே பாய்போல் சுருட்டி சமுத்திரத்திற்குள் போய்விட்டான், பூமாதேவி! வருந்தும் துயரம் கொஞ்சமல்ல, இச்சமயம் தாங்கள் சும்மா இருப்பீரேல், அனியாயமாக, அமரர்களின் பூண்டு அடியோடெழிந்துப்போகும், எனவருந்த நாராயணன் தேவர்களின் முறைக்கிறங்கி, வராகரூபம்தாங்கி கடலுக்குள் புகுந்து, இரண்யாக்ஷதனை எதிர்த்து பாதாளத்திலேயே மடித்து, அவன்து சாபத்தை யொழித்து, பூமியை தனது மூக்கின் முனையால் ஏந்தி வெளிவந்தனர்.

இவர் பாதாளத்திலிருந்து வெளிப்பட்ட வழியானது குடந்தை நகரமானதாலும் இவர் வெளிவந்ததிற்கு வராக தீர்த்தமென்றும் பெயரிட்டழைக்கப்பட்டது. அந்த தீர்த்தத்திற்கு மேற்கரையில் ஓர் விநாயகரை ஸ்தாபித்து, அவருக்கு வராகப் பிள்ளையார் என பெயர் வழங்கப்பெற்று கீழ்க்கரையில் வராகப்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ளார், இவ்வாராக தீர்த்தத்திலாடி வராகப்பெருமானையாரொருவர் பூஜைப்புரிகிறார்களோ அவர்களின் ஆபத்துகளனைத்தும் அபலமாய் ஒழிந்துப்போகும்.



## நாகலிங்கேசர் சரிதை

இவ்வுலகின் பாரத்தைத்தாங்கும் பொருட்டு பாதாளலோகத்தரசனான, ஆயிரம் பாணாமுடியைத்தரித்த ஆதிசேடன் தோன்றினான், இதனுடன், நாகமெட்டு, யானையெட்டு, மலையெட்டு, இதுகளும் தோன்றி இருந்தன, ஆதிசேடன் சிலநாள் ஐந்நூறு தலைகளாலும், மற்றும்பல தலைகளால் சிலகாலமும் பூமியை தாங்கியும், தன்னால் பூமிபாரம் தாங்கமுடியவில்லை இந்த கவலையை யார்தீர்க்க வல்லவர் என்று, ஆழ்ந்துயோசிக்கலானான், முடிவில், கயிலையை யடைந்து, கபாலமூர்த்தியை தரிசித்து தனது குறைகளைத் தீர்த்துக்கொள்வோமென திடசித்தங்கொண்டு, கைலையணுகி கடவுளைப் பணிந்து தனது குறைகளைப் பகரலாயினான், சேடனின் குறைகளைக்கேட்ட சிவபெருமான். அப்பா! அஞ்சாதே, உன் ஆயிரம் சிரம் தாங்கிய பாரத்தை ஒரே தலையினால் சுமக்கும் வரம் தருவோம் என, ஆதிசேடன் அம்பலவாணா! அடியேனுக்கு தாங்கள் அவ்விதம் வரமளியாவிடில் அடியேனுக்குள்ள கியாதிகளனைத்தும், வீணே மறைந்துப்போம் என மலரடிப்பணிந்து நிற்க, பரமேஸ்வரன், அரவராஜனை நோக்கி கூறுகிறார். அன்பனே! நீ இப்பொழுதே இம்மகமேருகிரிக்குதெற்குதிசையில் திராவிடதேசமாகிய சோழநாட்டின் கீழ்கடலுக்கு மேற்பக்கத்திலுள்ள காவேரி நதிக்கரையில் தென்பாரிசத்தில், கும்பமாநகரமென்றொரு ஸ்தலமிருக்கின்றது. அந்த க்ஷேத்திரத்தின் பெருமையைப் புகல யாருமே ஈடல்ல, அங்கு நாம் கும்பேலிங்கேசர், உமாபாகர், அபிமுகேசர், கூவிளவனேசர், காசிலிங்கேசர் என பல அவதாரங்களைப் புனைந்து ஆங்காங்கு திருக்கோயில் கொண்டெழுந்தருளியுள்ளோம், நீ அங்கு சென்று கூவிளவனேசர் எனும் லிங்கத்தை பூஜைசெய்தால், உனது கவலையும் விலகும், பலம் பெருகும், மற்றும் பல வரங்களும் நீயடைக்கூடுமெனப்புகன்றார்.

தேவனின் திருவாக்கை குருவாக்காக கைக்கொண்ட ஆதிசேடன் உடனே புறப்பட்டு, கும்பமாநகரை யடைந்து

கூலிளவசேசரை மிகபக்தியுடன் துதித்து, அங்குள்ள தீர்த்ததி லாடி இருந்தான் சிலநாள் சென்றதும் அரவராஜனின், மனக் குறையை யகற்ற எதிர்தோன்றி யாதுவரம் கோரி எனே துதித் தாய் எனவினவ, நாகராஜன், ஐயனே! அடியேனல் பூமிபாரம் தாங்க முடியவில்லை, ஆதலால் இப்புவியைத்தாங்கும் வலிமை யும், உனது அடிமலரைத்தாங்கும் அருளும் பெற விரும்பியுள் ளேன். தவிரவும் இந்த ஸ்தலத்திற்கு நாகேசம் என்றும், இங் கிருக்குமிந்த தீர்த்தத்திற்கு நாகதீர்த்தம் என்றும், யான் இப் பொழுது பணிந்து துதித்த தங்கள் உருவத்திற்கு நாகேசர் என் றும் பெயர் அமையவேண்டும், இந்த ஸ்தலத்திற்கு யாரொருவ ரணுகி வணங்கி பூஜிக்கின்றார்களோ அவர்களின் கன்மவினை யகலவேண்டும், சிலருக்கு நாகதோஷத்தின் காரணத்தால் புத் திரப்பேரற்றிருப்பினும், புத்திரர்களையின்று பல்லூழியாக வாழ வேண்டும், சர்பம் தீண்டிய பேர்களுக்கு இந்த தீர்த்தத்தை அருந்தச் செய்தால் உடனே விஷம் நீங்கி நன்மையடைய வேண் டும், இதுபோன்ற வரங்களை இவ்வடியேனுக்கு தந்தருள வேண்டும் என்று ஆதிசேடன் கேட்க, இறைவன் மனதிறங்கி மகிழ்வுடன் வரமீய்ந்து மறைந்தருளினர். இதனல் தான் நாக லிங்கேசர் எனபெயரமைக்கப்பட்டது.

### மதங்கரிஷிக்கு வரதராஜப் பெருமாள் காக்ஷிகொடுத்த படலம்.

மகேந்திரகிரியென்னும் மலைச்சாரலில் மகாதவத்தில் சிறந்த மதங்கரிஷி என்னும் ஓர் தபசியிருந்தார் அவர் அனுதினமும், காஞ்சி, சேது, குடந்தை, இந்த மூன்று க்ஷேத்திரங்களுக்கும், மூன்று காலமும் சென்று தரிசித்து வருவதே அவருடைய நோக்கமாயிருந்தது, இதுபோலவே வெகுகாலமாக மதங்க முனிவர் நாள் தவராமல் சென்று வருங்கால், ஒருநாள், காலை யில் குடந்தையை யடைந்து கும்பேசரை துதித்து காஞ்சிமா நகருக்கு நோக்க முற்றிருக்கும் சமயம், காஞ்சியில் திருக்



கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற வரதமூர்த்தியானவர் பக்தனின் மனதை சோதிக்க நினைத்து, வாயுதேவனை யனுப்பி காற்றைப் பறவச்செய்து, வருணனை ஏவி பெருவெள்ளம் போகும் மழைபொழிய ஆக்யாபித்தார் ஆண்டவன் ஆக்கினைப் படி நடக்கலாயினது. மணியோ உச்சிப்பொழுதாகும் சமயம் நெருங்கியது. மதங்க முனிவர் மனமுடைந்து ஓர் புரமாக அமர்ந்துவிட்டார், மழைவிட்டபாடில்லை, ஹா! ஆபத் பாந்தவா! அனதை ரக்ஷகா! அபையமென்றடைந்தவர்களை யாதரிக்கும் தயாளனே! அடியேன் இதுநாள்வரையில் ஒருவித பின்னமு மேற்படாமல் அனுதினமும் தங்களை வந்து கண்டானந்தித்து துதித்துச செல்வேன், இன்று இவ்விடா மழையினல், எனது நெரிதவரிவிடும் போலிருக்கின்றதே, இப்பெரும்பாவத்தை யானடைவதைவிட, என்னுயிரை மாய்த்துக் கொள்வதே நல மாகும் என மனதிடங்கொண்டு, அங்கோர் மரத்தின்கீழ்நின்று தனது உயிரைவிட முயற்சித்தார்.

இதுகளனைத்தும் கண்டறிந்த பகவான்! மனம் பதரி, ஆஹா! பக்தனின் மனதை பரிசோதித்தோம், இனி தாமதித் தால், மோசத்திற்கிடமாகும், என உடனே, மதங்க மகரிஷியின் எதிரில் சங்குசக்ரரூடராய், கருடவாகனத்தின் மீதமர்ந்து, எதிர் தோன்றி, பக்தா! அஞ்சாதே, உன் பொருட்டே, எனது நகரை விட்டு, இந்த குடந்தைமா நகரையடைந்தேன் ஆயினும் இனி உன்மன நோக்கங்கொண்ட வரத்தைகேள் தருகிறேன். என மதங்கர், ஐயனே! என்பொருட்டாய் தாங்களுக்கு எவ்வளவோ சிரமம், தவிர, இவ்வடியேன் கோரும் வரம் ஏதென்றால், இவ் விடத்திலேயே தேவரீர் திருக்கோயில் கொண்டெழுந்தருள வேண்டும், இங்குள்ள தீர்த்தத்திற்கும் இவ்வடியேனின் திரு நாமம் விளங்கவேண்டும், இந்த ஸ்தலத்தையடைந்து இப்புண் ணிய நதியில் தீர்த்தமாடி தங்களை தெரிசிக்கும்பேர் யாவராயி னும் அவர்களின் இடையூருகளைத்து ஜென்ம சாபல்யம் தந் தருளவேண்டும் என, நாராயணமூர்த்தியாகிய எம் பெருமான் பக்தனின் வேண்டுகோளுக்கிணங்கி விருப்பமுற்றபடியே வாக்களித்து அங்கனமே திருக்கோயில் கொண்டருளினர்.

---

கலைமகள் அச்சகம் சென்னை 19.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

மாந்திரீக நிபுணர்களுக்கு நல்விருந்து

இன்றே! ஆர்டர் செய்யுங்கள்

குறைந்த விலை! நிறைந்த முறைகள்

## மலையாள மாந்திரீக

# வ ரா கி மா லை

மாந்திரீகம் கற்றுக்கொள்ளும் நண்பர்களே! இதில் கணபதி மூலமந்திரம், கணபதிபூஜை, உடல்கட்டு, சுப்ரமணியர்பூஜை, உச்சாடனம், சமுதாயமாரல், அனுமார்பூஜை, அனுமார்வசியம் சுளுக்கு மந்திரிக்க, தேள் விஷமிறங்க, பாம்புகடிக்கு விஷமிறங்க, குழந்தைகளுக்கு உண்டான குளிதோஷம், ஜலம் மந்திரிக்க, சத்திபூஜை, வாலைவசியம், வாலைசடாக்ஷரம், மனோன்மணிபூஜை ஏவலை திருப்ப, பிசாசுகளை விலக்க, வைப்புகளை திருப்ப, பேய்பந்தனம் செய்ய, பயம் தெளிய, விபூதிப்பிடிக்க மோகினி வசியம், அஷ்டலட்சுமி வசியம், காட்டேரி வசியம், சகல கழிப்பு கழிக்க, மதுரைவீரன் பூஜை, மயானருத்திரன் பூஜை, காளிவசியம், பத்ரகாளிவசியம், முத்துமாரியம்மன்பூஜை வயிரவர் வசியம், ஜண்டி வசியம், திருநாகேஸ்வரி வசியம், நவகிரகங்கள் வசியம், கட்டருக்க மந்திரம், வியாபாரத்திற்கு வசியம், இன்னும் இவைபோன்ற அநேகவிதமான சங்கதிகள் அடங்கியுள்ளன இதில் சக்கரங்களும் அவைகளுக்குறிய மந்தரங்களும் செய்யவேண்டிய கிரமங்களும் பூஜைக்குண்டான சாமான்களும் விபரமாகஎழுதியுள்ளது யாவரும் அதிவிரைவில் கற்றுக்கொள்ளலாம்,

தபாற் சிலவு அணு 8 **விலை ரூபா 1—4—0**

**கிடைக்குமிடம்:—**

**டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2, எழுத்துக்காரன் தெரு காலாடிப்பேட்டை சென்னை 19



**கலைமகள் பதிப்பு**

**மூலமந்திர சக்கரங்கள் அடங்கிய**

## க ரு வூ ரா ர்

# மலையாள மாந்திரீக அரிச்சுவடி

இதில் விநாயகர் சுப்பிரமணியர் பூஜை, சகலதோஷம், குளிதோஷம், தேள்சுளுக்கு முடிகயிறுகட்ட, நவக்கிரக வசியமும், வாலை பஞ்சாக்ஷரி வயிரவர் மோகினி அஷ்டலக்ஷ்மி அனுமார் காட்டேரி நரசிம்மசுவாமி அக்னிமாடன் வீரபத்திரர் மயானருத்திரன் மதுரைவீரன் சத்தி வசிகரமும், முச்சந்தி தோஷ நிவர்த்தி, அஷ்டதிக்கு பந்தனம், அந்திதோஷம உச்சி தோஷம் பேய் பிசாசுகளைக்கட்ட, கழிப்பு, முனிகளை ஓட்ட, பரம்பரையார் கையாண்டுவந்த வர்த்தகம் உத்தியோகம், விரோதி வசியமும், இன்னும் அநேக விஷயங்களுடன் சக்கரங்களும் சேர்த்து வெளியிட்டுள்ளதால் இந்நூல் ஒவ்வொருவரும் மிக எளிதாகக் கற்றுக்கொள்வதற்கு அருமையான நூல். ஆதலால் கலைமகள் பதிப்பை கவனித்து வாங்கவும்.

தபால் சிலவு வேறு **இதன் விலை அணு 8**

## தங்கையின் பாசம் - (அல்லது)

# ஏ ழை யி ன் க ண் ணீ ர்

**கதை வசனத்தோடு கூடியது**

ஏழையின் கண்ணீர் ஆம்! எல்லார்க்கும் இடங்கொடுத்து ஏமாந்த தமிழ் நாட்டில்தான் ஏழையின் கண்ணீர் வந்தவரை வாழவிட்டு தன் வாழ்வை சிதைத்த தமிழ் நாட்டில் தான் ஏழையின் கண்ணீர் எந்த நாட்டிலும் மேலான என் தங்க திருவிட தமிழ்நாட்டில்தான் ஏழையின் கண்ணீர். கதை, வசனம் வாங்கி படித்துபாருங்கள். தோழர்களே! தும்பை மலர்போல் துவண்ட தொழிலாளி, விவசாயி வரலாற்றை வாங்கிபடித்துப் பாருங்கள் பார்த்து அறியுங்கள் ஏழையின் கண்ணீரை.

தபால் சிலவு 0-8-0 **விலை அணு 0-8-0**

கிடைக்குமிடம்:- **டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2, எழுத்துக்காரன் தெரு காலாடிப்பேட்டை சென்னை 19.

923:38, 2119312

திரைப்பட வசனகர்த்தா

**ஆர். வி. பதி அவர்களால் தீட்டியவை**

நீங்கள் நீண்ட நாளாக எதிர்ப்பார்த்திருந்த !

**வீ ர பா ண் டி ய ன்**

# க ட் ட பொ ம் ம ன்

**வ ர லா ற் றை**

அனல் தெரிக்கும் அடுக்குமொழி சொற்களால் எழுதப்பெற்ற

**கதை, வசனத்தோடு கூடியது**

**மாணவர்களே!** மார்புயர்த்தி வாழ்ந்த மரத்தமிழர்களே!! வீரிட்டெழும் விழிப்புணர்ச்சி தோழர்களே!!! நம் நாட்டு வீரன் தென்னாட்டுதீரன் **வீரபாண்டியன் கட்டபொம்மன்** அவனை நம்நாடு இழந்தது நாம் இழந்தோம் அந்த வீரனை அழித்த ஆங்கிலேயன் கொடுமைகளை தமிழகமென்னும் நாட்டிலே நம் மரபு என்றமையாலே தீட்டிய **வீரபாண்டியன் கதையை** படிக்க வேண்டிய தமிழ் மணிகளே! முத்துமணிகளே!! நம் நாட்டு நவரத்தினங்களே!!! **கன்னிதமிழ் வீரபாண்டியன் கட்டபொம்மன் கதை,** வசனம் படிக்க தவராதீர்கள்! தூக்குமேடையிலே நமது **கட்டபொம்மன்** கொட்டிய சொற்கள் ஒவ்வொன்றும் கனல் கக்கும் வசனம், ...யரின் வீரத்தை வெள்ளைத் தேவன் மனைவி ...டும் ... படிக்க தவராதீர்கள் அற்புத வசனம் அந்த நாளைய நம் வீரன் கதையை நமக்கு தீட்டி தந்தார்.

தபால் சிலவு 0-8-0 விலை அணா **0—12—0**

112778

கிடைக்குமிடம்:—

**டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்**

நெ-2, எழுத்துக்காரன் தெரு தூலிப்பேட்டை சென்னை 19.

அகஸ்தியர் அனுபோக

# வைத்திய களஞ்சியம்

சித்தர்களில் ஒருவராகிய அகஸ்திய முனிவர், வைத்தியத்திலும் சோதிடத்திலும், மாந்திரீகத்திலும் அனேக நூல்கள் செய்துள்ளார் அவற்றில் இந்நூல் வைத்தியர்கள் ஏட்டு பிரதிகளில் மிகரகசியமாக வைத்து உபயோகித்து வந்தனர். அப்படிப்பட்ட மகத்துவம் பொருந்திய இந்நூலை மிகவும் சிரமபட்டு பழமையா ஏட்டுபிரதிகளை அனேகரிடமிருந்து சேகரித்து வைத்திய தொழிலை கற்க விரும்பும் மாணவர்கட்கும், வைத்தியர்கட்கும், ஏனையோருக்கும் உபயோகபடும் மாதிரி நோய்கட்கு உரிய நாடி வகையறியவும், வியாதிகளின்குறி, மரண காலக்குறி, அதற்குறிய வியாதிகள், பலவித சரக்குகளின் சுத்திமுறை, சகல வியாதிகட்கும் மாத்திரை முறைகள், சூரண முறைகள், பஸ்ப முறைகள், செந்தூர முறைகள், மெழுகு, லேகியம், எண்ணைகள், கியாழ முறைகள், வீரிய முறைகட்டு வகை, திராவகம், அரிஷ்டம், ஆஸவம், முதலியவைகளை அதற்குரிய பத்தியங்களுடன் உண்ணவேண்டிய முறைகளும் கூறப்பட்டுள்ள நூல் இதுவே. கைக்கு அடங்கக்கூடிய நூலாகவும் அனேக விஷயங்களுக்கெல்லாம் ஓர் வழிகாட்டியாக உள்ள இந்நூல் உங்கள் வசமிருந்தால் வைத்தியரை தேடவேண்டிய அவசியமே இல்லை.

தபால் சிலவு அணு 10 — விலை ரூபா 2-0-0

சகாதேவர் அருளிச் செய்த

# அனுபோக நவக்கிரஹ ஆரூடம்

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்நாட்களிலேற்படும் பலாபலன்களை சுலபமாக பிறரது உதவியின்றியே அறிந்து கொள்ளலாம் ஆரூடம் சொல்பவர்கள் இதை அவசியம் வைத்திருக்க வேண்டும் பலகாரை உருட்டி அதனுல் ஏற்படும் லக்கத்தை கொண்டு பலாபலன்களை சொல்லவேண்டும்.

தபால் சிலவு அணு 8 — விலை அணு 12

கிடைக்குமிடம்:—

**டி. ஆர். பாலகிருஷ்ண முதலியார்**

நெ. 2, எழுத்துக்காரன் தெரு காலாடிப்பேட்டை சென்னை 19